Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 06 வெள்ளிக்கிழமை (21.12.2012) பக்கங்கள் 20 ஓசை – 082

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு





இல. 187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)













# யாழ். பல்கலைக்கழகத்தில் மீண்டும் கல்விச் செயற்பாடு

## யாழ். தளபதியுடன் பலாலியில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் சுமூக நிலையைத் தோற்றுவிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக யாழ். இராணுவத் தளபதியுடன் யாழ். பல்கலைக்கழக உயர்மட்டத் தூதுக்குழு இன்று முக்கிய சந்திப்பு ஒன்றை நடாத்தவுள்ளது.

ஏற்கனவே கைதான மாணவர்களை விடுவிப்பது தொடர்பாகவும் எதிர்காலத்தில் மாணவர்கள் எவரையும் கைது செய்வதனைத் தடுக்கும் வகையிலும், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் தலைமையிலான குழுவினருக்கும், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவிற்கும் இடையில் இன்றைய தினம் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

### மாணவிகள் விடுதலை

விசாரணைக்காக அழைக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவிகள் ஐவரும் விசாரணையின் இறுதியில விடுதலை செய்யப்பட்டுள்ளனர். நேற்றைய தினம் மேற்படி ஐந்து மாணவிகளும் விசாரணைக்காக வவுனியாவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். விசாரணைகளின் நிறைவில் நேற்றைய தினமே அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

பலாலி படைத்தலைமையகத்தில் இன்று காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ள இந்தச் சந்திப்பில் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் மற்றும் பீடங்களின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் கைதான மாணவர்களை விரைவில் விடுவிப்பதன் மூலம் பல்கலைக்கழகத்தில் கல்வி சார் செயற்பாடுகளை விரைவில் ஆரம்பிக்க முடியுமெனவும், எதிர்வரும் காலத்தில் மாணவர்களைக் கைது செய்வதனை நிறுத்த வேண்டுமெனவும் பல்கலைக்கழகக் கழக சமூகத்தினால் வலியுறுத்தப்படுமெனவும் எதிர்பார்க கப்படுகிறது.

## தெரிவுக்குழுவிற்கு இடைக்காலத் தடை

### இன்றைய தீர்ப்பில் முடிவு தெரியும்



பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை விசாரணை செய்யும் தெரிவுக்குழுவிற்கு இடைக்கால தடைவிதிப்பது குறித்து தீர்ப்பு இன்று அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை இரத்துச் செய்யுமாறு கோரி மேல்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதியரசர்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் யாப்புக்கு அமையவே தெரிவுக்குழு

### காட்டுச்சட்டம் இங்கு இல்லை

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆகியவை அனைத்துமே நாட்டின் அரசியல் யாப்பு விதிகளுக்கு அமையவே செயற்படுத்தப்பட்டு வருகின்றன என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். அதேவேளை திட்டமிடப்பட்டபடி பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க



## வடக்கில் அதிகரித்தது மதுபான விற்பனை

(குருநகர்)

நத்தார் புதுவருடக்கொண்டாட்டங்களால் வடபகுதியில் மதுசார விற்பனை அதிகரித்து உள்ளதாக காலால் திணைக்கள வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன. வெளிநாட்டு மதுசாரங்களின் விலைகள் அதிகப்படியாக

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரசியலுக்கு அழைக்கிறார் பொன்சேகா

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவை தீவிர அரசியலில் ஈடுபடும்படியும் அவ்வாறு நடைபெறும் பட்சத்தில் அவருக்கு உதவ தான் விரும்புவதாகவும் முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவருமான சரத் பொன்சேகா அழைப்பு விடுத்துள்ளார். அரசியலில் ஈடுபட்டதையிட்டு தனக்கு மனவருத்தம் எதுவுமில்லை என்று தெரிவித்துள்ள பொன்சேகா, தான் யாரும் கொடுத்த கயிறை விழுங்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதம நீதியரசர் அரசியலுக்கு வருவாராயின் அதுவும் யாரும் கொடுத்த கயிறை விழுங்கியதாகாது எனவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். தான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதாக இப்போதும் கருதுவதாக குறிப்பிட்டுள்ள பொன்சேகா, அதனால், அரசியலுக்கு வந்ததையிட்டு தான மனவருத்தப்படவில்லை எனவும் கூறியுள்ளார். எனது வெற்றியை யாரோ ஒருவர் தட்டிப் பறித்ததாக நான் இப்போதும் நம்புகின்றேன் என சரத் பொன்சேகா மேலும் கூறியுள்ளார்.

## மருத்துவருக்கு வாள்வெட்டு

யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்திய நிபுணர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ். கந்தர்மடம் சந்தியில் நேற்று இரவு 9.45 மணியளவில் இந்த வாள்வெட்டுச்

(19) ஆம் பக்கம் பார்க்க

இன்று உலகம் அழியும்



மாயன் நாட்காட்டியின்படி
இன்று காலை 9 மணிக்கு உலகம் அழியும்,
பிந்திய செய்தி என்பது பொய்.
ஆனால்
A/L - 2015
கலை, வர்த்தகப் பிரிவுகளுக்காக
ஜனவரி 5 காலை 9 மணிக்கு
நீங்கள் எங்களைச் சந்திப்பீர்கள்
என்பது மட்டும் மெய்.
(C/2226) DMI
Jaffna

## நாளைய தினமுரசில்...

### விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

14



என்ற கோரிக்கையை வலியுறுத்தினர். இவ்விடயம் உடனடியாக தமிழ்ச் செல்வனால் தலைவர் பிரபாகரனின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

வழங்கப்ப... அமைச்ச... அளவு ப... வழங்கப்ப... சங்கரியி... யிலான ... விரிந்து ... இத்தொட... சாதகமாக... அரச தர...

(17

# கிளிநொச்சி நகரில் விழிப்புணர்வுப் பேரணி

(கிளிநொச்சி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவைகள் அமைப்பும் இணைந்து பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிரான துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வுப் பேரணியொன்றை நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி நகர்ப்பகுதியில் நடத்தினர்.



தற்போது பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ள நிலையில், இதனால் பல பெண்கள் மற்றும் சிறுவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனை முற்றாக ஒழிக்கும் வகையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக விழிப்புணர்வுப் பேரணி இடம்பெற்றது. இப்பேரணி கிளிநொச்சி நகர்ப்பகுதியில் குறிப்பாக பஸ் நிலையப் பகுதியில் இடம்பெற்றதுடன், துஷ்பிரயோகங்கள் குறித்த துண்டுப் பிரசுரங்களும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. (77)

# சான்றிதழ், விருது வழங்கல்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கோட்ட இளைஞர் 4யூ அமைப்பின் ஏற்பாட்டில் மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக மதுசாரம் தொடர்பில் விசேட பயிற்சியினைப் பெற்ற 150 இற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஹெல்தி லங்கா 4யூ தேசிய சபை உப தலைவர் தே.பிறேமராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கௌரவ விருந்தினராக யாழ்.பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி சமன்சிகேரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.


சிறப்பு விருந்தினர்களாக யாழ்.இராணுவ அதிகாரிகளான ஜே.ஆர்.ஜெயவீர, டபிள்யூ கே. பிரியந்த, யாழ்.பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஈ. ஞானசோதி, யாழ்.மதுவரி அத்தியட்சகர் என். சோதிநாதன், ஈ.பி.டி.பி.யின் யாழ்மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

◈ ◈ ◈ ◈ ◈ ◈

(யாழ்ப்பாணம்)

யு.ஆர்.பிறண்ட் பௌண்டேசன் நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் AAA மூவிஸ் இன்ரநஷனல் நிறுவனத்தின் விருது வழங்கும் நிகழ்வு நாளை பிற்பகல் 5.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# வல்லை பரவைக் கடலில் இறால் சீசன் ஆரம்பம்



(அச்சுவேலி)

அச்சுவேலி வல்லைப் பரவைக் கடலில் தற்போதைய காலநிலை மாற்றத்தினால் அதிகளவு இறால் பிடிபடுவதாக மீனவர்கள் மகிழ்ச்சி வெளியிடுகின்றனர்.

இறாலுக்கு மிகவும் பெயர் போன வல்லை பரவைக் கடலில் தற்போது குளிர்காலம் நிலவுவதால் இறால்கள் அதிகமாகப் பிடிபடுவதுடன், காலநிலையும் சாதகமாகக் காணப்படுவதாக தொழில் செய்வோர் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

அத்துடன், மாலை நேரத்தில் தொழில் முடிந்து வீடு செல்பவர்கள் அவ் இறாலினை மீனவர்களிடம் வாங்கிச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு விற்பனை செய்யப்படும் ஒரு கிலோ இறால் 500 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கது.


## வாழ்வக அனுமதிக்கான விண்ணப்பம் கோரல்

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தில் பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கண் பார்வையற்ற அல்லது சாதாரண எழுத்தை இயல்பாக வாசிக்க முடியாத அளவுக்கு பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளின் பெற்றோர்கள், தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியுடனோ அல்லது 0212240146 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ உடன் தொடர்பு கொள்ளவும்.

அனுமதி பெறும் பிள்ளைகளுக்கான உணவு, உடை, உறைவிடம், கல்விச் செலவுகள், கல்விக்கான விசேட உபகரணங்கள் யாவும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

தலைவர்,
வாழ்வகம்.

(C/2227)


# மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மின் மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் புனரமைப்பு வேலைகளுக்காகவும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, மாவடி, தட்டார்தெரு தொடக்கம் முட்டாஸ்கடைச் சந்தி வரையான பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பரமேஸ்வரா சந்தி, கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படி, குருநகர், பாசையூர், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், பண்ணைப் பிரதேசம், மனோகரா பிரதேசம், யாழ்.மாநகர சபை பிரதேசம், யாழ்.நகரம் முழுவதும், வல்லிபுரப் பிரதேசம், புனித நகர், கற்கோவளம், உபயகதிர்காமம், நெல்லண்டைப் பிரதேசம், பளை, மிருசுவில், எழுதுமட்டுவாள், கொடிகாமம், உசன், மந்துவில், வரணி, மீசாலை, புத்தூர் சந்தி, சாவகச்சேரி பிரதேசம், மட்டுவில், பாலாவி, வெல்லம்பொக்கட்டி, கைதடி, மறவன்புலோ, நாவற்குழி, கோகிலாக்கண்டி ஆகிய இடங்களிலும்,

23.12.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் கோண்டாவில், உரும்பிராய், மருத்துவபீடப் பிரதேசம், பலாலி வீதி, கந்தர்மடம், யாழ். மாநகர சபை பிரதேசம், யாழ்.நகரம் முழுவதும், பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, தட்டார்தெரு தொடக்கம் முட்டாஸ்கடைச்சந்தி வரையான பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பரமேஸ்வரா சந்தி, ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படி, குருநகர், பாசையூர், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், பண்ணைப் பிரதேசம், மனோகரா பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், க[illegible]ர நகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, மந்திகை, கிராமக்கோடு, தம்பசிட்டி, ஓராம் கட்டை சந்தி, சாரையடி, புலோலி, பருத்தித்துறை நகரப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

எதிர்வரும் 24.12.2012 திங்கட்கிழமை, 26.12.2012 புதன்கிழமை மற்றும் 28.12.2012 வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மாவடிப் பிரதேசம், மூளாய் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.


## கடை வாடகைக்கு

சுன்னாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பஸ் நிலையத்திற்கு அண்மையில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
021 224 0405
0778535599

(C/2228)


ஞாயிற்றுக்கிழமை நேரில் வரவும்


# சட்ட ஆவணங்களைப் பெற இலவச நடமாடும் சேவை

தேசிய மொழிகள் மற்றும் சமூக சேவைகள் அமைச்சும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும், முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துடன் இணைந்த நடத்தும் சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான இலவச நடமாடும் சேவை நாளை புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் குறித்த பிரதேச செயலர் பிரிவிலுள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளான மாணிக்கபுரம், தீராவில் , வள்ளுவர்புரம், விசுவமடு கிழக்கு, மேற்கு, சுதந்திரபுரம், தேவிபுரம், உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு, வள்ளிபுனம், ஆனந்தபுரம், மல்லிகைத்தீவு, மந்துவில், புதுக்குடியிருப்பு கிழக்கு, மேற்கு, சிவநகர், இரணைப்பாலை, கோம்பாவில், மன்னார் கண்டல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்நடமாடும் சேவை மூலம் பயன்பெற முடியும்.

இந்நடமாடும் சேவை இறுதிகட்ட நடமாடும் சேவையாதலால் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தும்படி கோரப்பட்டுள்ளது. (04)



யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரியின் தொழில்சார் கற்கை நெறிப் பிரிவின் ஏற்பாட்டில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சிப் பட்டறை இடம் பெற்றது. அமெரிக்க முன்பள்ளி சமூகத்தின் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சித் திட்டப் பயிற்சியாளர் எலிசபெத் துரை வளவாளராகக் கலந்து கொண்டு பயிற்சிகள் வழங்குவதையும், சான்றிதழ் வழங்குவதையும் காணலாம். (எஸ்.பி.)

# மாறிவரும் கல்வித்திட்டத்திற்கேற்ப ஆசிரியர்கள் தயாராக வேண்டும்

## – பேராசிரியர் மா.நடராஜசுந்தரம்

(வடமராட்சி)

எதிர்காலத்தில் கல்வியில் ஏற்படப்போகின்ற சவால்களை எதிர்கொள்வதற்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கும் அதேநேரம் அதிபர், ஆசிரியர்கள் தம்மைத் தயார்ப்படுத்த வேண்டும் என பேராசிரியர் மா.நடராஜ சுந்தரம் தெரிவித்துள்ளார்.

உலக ஆசிரியர் தினத்தில் நல்லாசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் வடமராட்சி வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்றைய உலகம் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு தகவல் காலமாக மாறிக் கொண்டு வருகின்றது. இந்தக் காலத்தில் நாம் கல்வியில் பல்வேறு சவால்களை எதிர் நோக்கப் போகின்றோம். அறிவு சார்ந்த இந்த உலகத்தில் அறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது அதன் பின்புலமாக கல்வியின் வளர்ச்சி முக்கிய இடத்தினைப் பெறுகின்றது.

கல்வி என்பது ஒரு வாழ்நாள் முழுவதும் செயல் முறையாக அமைவதுடன் ஒரு மனித வாழ்க்கையில் சிறு பிள்ளை முதல் முதியோர் வரை பயன்படுத்தப்படும். கல்வியின் அடிப்படை நோக்கம் ஒரு மனிதனுக்கு நன்னடத்தையுடைய சிந்தனைச் சக்திக்கான ஒரு பயிற்சியை வழங்குவதுடன், அந்த சக்தியினைக் கொண்டு தடையின்றி சிந்திக்கும் தன்மையினையும், அதே நேரம் அந்த சிந்தனையை சரியான வழியில் நடைமுறைப் படுத்தவும் உதவுகின்றது.

ஆசிரியத்துவத்தைப் பொறுத்தவரை ஆசிரியர் 'அர்ப்பணிப்புடையவராகவும், நேர்மையுடையவராகவும், நம்பிக்கையுடையவராகவும் நன்னடத்தை உடையவராகவும் விளங்க வேண்டும்.

அத்தகைய ஆசிரியர்கள், அதிபர்கள்தான் ஜனாதிபதி விருது பெற்றுள் ளவர்களாவர். ஆகவே தொடர்ந்து வரும் காலகட்டத்தில் மேலும் சிறப்பான முறையில் உங்கள் பயணங்களை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் எதிர்காலத்தில் ஏற்படப்போகின்ற சவால்களை எதிர்கொள்வதற்கு ஆசிரியர்களும், அதிபர்களும் தம்மைத் தயார்படுத்த வேண்டும் என்றார்.

(116)

## சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2012

உறுப்புரை - 18

சந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம், மதச்சுதந்திரம் என்பவற்றுக்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையினுள் ஒருவர் தனது மதத்தை அல்லது நம்பிக்கையை மாற்றுவதற்கான சுதந்திரமும் போதனை, பயில்நெறி, வழிபாடு, அனுட்டானம் என்பன மூலம் தனது மதத்தை அல்லது நம்பிக்கையைத் தனியாகவும் வேறொருவருடன் கூடியும், பகிரங்கமாகவும் தனிப்பட்ட முறையிலும் வெளிப்படுத்துவ தற்கான சுதந்திரமும் அடங்கும்.

## காணி மோசடி; சகோதரன் கைது

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு, பகுதியில் உள்ள காணியொன்றை மோசடி செய்து விற்றதாகக் கூறப்படும் நபர் ஒருவரை குற்றப்புலனாய்வு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரான்ஸில் உள்ள சகோதரியின் காணியை மோசடி செய்தார் என்று கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கிணங்கவே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய நிறுவுனர் தினமும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் உரையாற்றுவதையும், திருமதி இராஜேஸ்வரி சத்தியசீலன் பரிசில் வழங்குவதையும் காணலாம். (01)

## ஒன்றுகூடல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் மன்ற வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஒன்றுகூடலுக்கு கல்லூரியின் பழைய மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் மன்றத் தலைவர் அறிவிததுள்ளார்.

(109)

## வீதி நடைமுறைகளை மீறும் சாரதிகளை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை

மந்திகை ஆதார வைத்திய சாலைக்கு முன்பாக மணல் ஏற்றிச் செல்லும் பார ஊர்திகளின் சாரதிகளை மன்னிப்பேதுமின்றி கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரித்தவுஸ் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

மந்திகை ஆதார வைத்திய சாலையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வீதி மற்றும் கொடிகாமம் செல்லும் வீதியூடாக மணல் ஏற்றிச் செல்லும் பாரவூர்திகள் அதிவேகமாக ஓட்டிச் செல்வதாக தகவல்கள் எமக்கு கிடைத்து வருகின்றன.

இதனால் வைத்திய சாலைக்கு வருவோர் விபத்துக்குள்ளாக வேண்டிய சந்தர்ப்பம் அதிகம் உள்ளதால் குறித்த வைத்தியசாலைக்குச் செல்லும் வீதியூடாக பாரவூர்திகளுக்கு அனுமதியில்லாத போதிலும் அத்துமீறி குறித்த வீதியூடாக வாகனம் செலுத்தும் சாரதிகளை மன்னிப்பு ஏதுமின்றி கைது செய்ய பருத்தித்துறை போக்குவரத்துப், பொலிஸாரினால் விசேட திட்டமொன்று கொண்டு வரப்பட்டுள்ளது. இதனைக் கண்காணிக்க விசேட போக்குவரத்துப் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அத்துடன் பலவகையான வாகனச் சாரதிகள் இரவு நேரத்தில் உயர்ந்த வெளிச்சத்துடன் (பவர் லைட்) வாகனங்களை வேகமாகச் செலுத்துவதனால் முக்கியமாக துவிச்சக்கர வண்டி செலுத்துபவர்கள் விபத்துக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்கள் நிகழ்கின்றன.

மேலும் இரவு நேரத்தில் மது போதையில் வாகனத்தைச் செலுத்திய சாரதிகளையும், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய சாரதிகளையுமே இதுவரை கைது செய்துள்ளோம். எனினும் மேற்படி போக்குவரத்து விதிமுறைகளை மீறிச்செயற்படுபவர்கள் யாராக இருந்தாலும் போக்குவரத்துப் பொலிஸாரால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விசேட செயற்றிட்டத்தின் கீழ் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(116)

## வருடாந்த பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிறுவர் உலகம் முன்பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக திறந்த பல்கலைக்கழக முன்பள்ளி பாடசாலை கல்வித் திட்ட இணைப்பாளரும் நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் திருமதி குககுமாரி விஜயரகுநாதன், முன்பள்ளி பாடசாலைக் கல்வித்திட்ட உதவி இணைப்பாளர் கே.விமலநாதன், ஆர்.அருள்செல்வம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## தொழிற்பயிற்சி அதிகாரசபையால் கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் அரசாங்க வேலைகளுக்கான நேர்முகத் தேர்வில் எதிர்பார்க்கப்படும் 720 மணித்தியாலயங்களைக் கொண்ட தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இக்கற்கை நெறியில் வீரசிங்க மண்டப மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் தகவல் தொழில் நுட்பத்தில் தேசிய டிப்ளோமா (NDICT) ஒரு வருடம், தகவல் தொழில் நுட்பத்தில் தேசிய சான்றிதழ் (NCICT) ஒருவருடம், தகவல் தொழில் நுட்பத்தில் தேசிய சான்றிதழ் (NCICT) 6 மாதம் கணனிவன்பொருள் (NVQ3) 6 மாதம் ஆகிய கற்கை நெறிகளும்,

காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மின் தொழில்நுட்பவினைஞர் (NVQ III) 6 மாதம், உந்துருளிதிருத்துகை (NVQ III) 6 மாதம் கட்டட நிர்மாணம் (NVQ III) 6 மாதம், ஆடை வடிவமைப்பாளர் (NVQ IV) 6 மாதம் ஆகிய கற்கை நெறிகளும் இடம்பெறவுள்ளன.

சண்டிலிப்பாய் பிரான்ப்பற்று தொழிற்பயிற்சி நிலையத்தில், மின் தொழில்நுட்ப வினைஞர் (NVQ III) 6 மாதம், முக அழகியல் (Facial) (NVQ III) 3 மாதம், சிகை அலங்காரம் (Hairs Tylist) (NVQ III) 3 மாதம் ஆகிய கற்கை நெறிகளும் கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில், மின்னியல் வல்லுனர் (தொழிற்சாலை (NVQ IV) 1வருடம் கனரக வாகனம் திருத்துனர் (Automobile) (NVQ IV) 1 வருடம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (NVQ IV) 6 மாதம், காய்ச்சி இணைத்தல் (NVQ III) 6 மாதம் ஆகிய கற்கை நெறிகளும் இடம்பெறவுள்ளது.

வடமராட்சியில் பருத்தித்துறையில் குளிரூட்டலும், வளிசீராக்கலும் (refrigerator & Air - Condition) (NVQ IV) 1 வருடம், கரவெட்டியில் அலுமினியக் கட்டுமானம் ((NVQ III) 6 மாத கற்கை நெறிகளும், தீவகத்தில் ஊர்காவற்றுறையில் வெளியிணைப்பு இயந்திர திருத்தம் (NVQ III) 6 மாத கற்கை நெறியும் இடம்பெறவுள்ளது.

தேசிய சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி கற்கைநெறிகளில் இணைய விரும்புவோர் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ தமது விபரக்கோவையை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு சபையின் இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

## மீள்குடியமர்ந்த மக்களுக்கு 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 3 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மீள்குடியமர்ந்த மக்களில் யு.என்.ஏச்.சி.ஆர். நிறுவனத்தால் வழங்கப்படும் 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெறாத மக்களுக்கான கொடுப்பனவு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் 4 மணிவரை வழங்கப்படவுள்ளது.

இதில் குறித்த பிரதேச செயலர் பிரிவிலுள்ள முள்ளிவாய்க்கால் கிழக்கு, மேற்கு, அம்பலவன் பொக்கணை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களில் இக்கொடுப்பனவை பெறாத மக்களுக்கு இன்றைய தினம் அம்பலவன் பொக்கணை கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவைப் பெறவரும் மக்கள் குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வருகைதருமாறு கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (04)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## ஊடகப் பெருக்கமும் மூடிமறைப்பும்!

இந்தியத் தலைநகரான டெல்லியில் மருத்துவக் கல்லூரி மாணவி ஒருவர் ஓடும் பஸ்ஸில் பலாத்காரம் செய்யப்பட்டு காடையர்களால் பஸ்ஸிலிருந்து வெளியே வீசப்பட்ட சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்திய ஊடகங்களில் இது குறித்த சர்ச்சைகள், மற்றும் நாடுமுழுவதும் கண்டனக் குரல்கள், நாடாளுமன்றத்திலும் ஆர்ப்பாட்ட எதிர்ப்பு, காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி அச்சம்பவத்திற்குக் காரணமானவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை என பல பக்கங்களிலுமிருந்து சீற்ற அலைகள் வெளிப்பட்டிருக்கின்றன.

எந்த நாடாக இருந்தாலும் நகரங்கள் பெண்களுக்கு எவ்வளவு ஆபத்தானவையாக மாறிவருகின்றன என்பதும் பொது இடங்களும், இராத்திரி வேளைகளும் பெண்களுக்குரியதல்ல, அவை ஆண்களுக்கே உரியன என்கிற பழையகால மனநிலையே மீண்டும் உருவாகி வருவதும் பலரையும் விசனப்பட வைத்துள்ளது. அதுமட்டுமல்ல எல்லாவிதமான ஒழுக்க வாதங்களும் பெண்களுக்கு எதிராகவே அமைவதும் இதனோடு சுட்டிக்காட்டப்படுகிறது.

அதேசமயம், இம்மாதிரியான சந்தர்ப்பங்களை ஊடகங்கள் வெறும் பரபரப்புக்காகத் தூக்கிப் பிடித்துவிட்டு அடுத்த பரபரப்புக்குத் தாவுகின்ற ஊடகக் கலாசாரமும் விமர்சனத்திற்குள்ளாக்கப்படுகிறது. குறிப்பாக, முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதியும் தற்போதைய இந்திய பத்திரிகைக் கவுன்சில் தலைவருமான மார்க்கண்டேய கட்ஜூ வழக்கம்போல சில குறுக்கீட்டுக் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

டெல்லியில் நடைபெற்ற சம்பவம் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால் இதே விஷயம் இந்தியாவின் பல பகுதிகளில் குறிப்பாக கிராமப்புற பகுதிகளில் நடக்கும் போது ஏன் கண்டனக்குரல்கள் எழுப்பப்படுவதில்லை, ஊடகங்கள் ஏன் அவற்றைக் கண்டுகொள்வதில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இன்று ஏற்பட்டுள்ள ஊடகங்களின் பெருக்கமும், விற்பனைக்காக முண்டியடிக்கிற போட்டியும் நாட்டிலுள்ள எத்தனையோ ஜீவமரணப் பிரச்சினைகளை மறைத்துவிட்டு சிலவற்றுக்கே அதிக வெளிச்சம் போடுவதாகவும், அவற்றையும் எதுவித பொறுப்புணர்வுகளும் இன்றி எழுதியும் காட்சிப்படுத்தியும் தள்ளுவதாக அவர் விசனம் தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவரது அறிக்கையில், “விதர்பா, ஆந்திரா ஆகிய இடங்களில் கடந்த 10 முதல் 15 ஆண்டுகளில் இதுவரை 2 லட்சத்து 50 ஆயிரம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். நாளொன்றுக்கு சராசரியாக 47 விவசாயிகள் தற்கொலை செய்கின்றனர். விவசாயிகள் தற்கொலையில் உலக சாதனை இது. இந்தியா இதில் கின்னஸ் சாதனை படைத்துள்ளது. நான் பாலியல் பலாத்காரத்தை நியாயப்படுத்தவில்லை. அதே நேரத்தில் இது மட்டுமே நாட்டின் பிரச்சினை அல்ல. அனைத்து பிரச்சினைகளும் சமமான முக்கியத்துவத்துடன் கவனிக்கப்படவேண்டும்” என்றுள்ளார்.

ஊட்டச்சத்து இல்லாத குழந்தைகள், வேலை வாய்ப்பில்லாத இளைஞர்கள் எவ்வளவோ பேர் உள்ளார்கள். விலைவாசி சாதாரண மக்களை வீழ்த்தி றொக்கெற் வேகத்தில் மேலே சென்று கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினைகளுக்கும் இதேபோன்ற முக்கியத்துவத்தை அளித்து, அரசியல் கட்சிகளும், பொதுமக்களும் போராட வேண்டும் என அவர் கேட்டிருக்கிறார்.

மார்க்கண்டேய கட்ஜூ சொல்லியிருப்பதுபோல ஒவ்வொரு நாட்டிலும் சாதாரண மக்களுக்கு எத்தனை எத்தனையோ பிரச்சினைகள் உள்ளன. உலக அளவிலான பிரச்சினைகள், நாட்டளவிலான பிரச்சினைகள் எல்லாவற்றையும் அவ்வப்போது வரும் ஊடகப் பரப்புரைக்கு வாகான பிரச்சினைகளில் மூடி மறைத்துவிட்டு போலியான பரபரப்பில் மக்கள் ஏமாற்றப்பட்டே வருகிறார்கள் என்பது என்னவோ உண்மைதான். - ஆசிரியர்

# பல்கலை மாணவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்து

(கொழும்பு)

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது. குறித்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட வேண்டும் அல்லது அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென அந்த அமைப்பு கோரியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் குறித்த பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஆரம்பத்தில் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த மாணவர்கள் தற்போது புனர்வாழ்வு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ஏனைய மாணவர்கள் பற்றிய தகவல்களைக் கோரி குறித்த மாணவர்களிடம் கடுமையான விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக அவர்களது பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மாணவர்கள் மூன்று மாத காலத்திற்கு தடுத்து வைக்கப்பட உள்ளதாகவும் அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமைதியான முறையில் நடத்தப்படும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களுக்கு இலங்கை அரசாங்கம் தடைகளை ஏற்படுத்தக் கூடாது என மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

அடிப்படை உரிமைகளை குற்றச் செயல்களாக அரசாங்கம் அடையாளப்படுத்தக் கூடாது என சுட்டிக்காட்டியுள்ளது.

# வவுனியாவின் வரலாற்று தகவல் ஆவணப்படுத்த ஆக்கம் கோரல்

(வவுனியா)

வவுனியா பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களை ஆவணப்படுத்தும் வகையில் வவுனியாவில் பல்வேறு துறை வளர்ச்சிகளை இனம் கண்டு அடையாளப்படுத்தும் வகையிலும் விரிவான நோக்கத்துடன் நூலொன்றினை எதிர்வரும் ஜனவரி மாதம் வவுனியா பிரதேச செயலகத்தால் வெளியிடப்படவுள்ளதால் ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

ஆக்கங்களை அனுப்பி வைக்க விரும்புவோர் ஆய்வுக்கட்டுரை, கவிதை, சிறுகதை, விளக்கப் படம், சித்திரம், மற்றும் ஏனைய துறைகளில் எழுதி எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலருக்கு கிடைக்க ஆவன செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

எனினும் ஆக்கங்கள் நூலின் வெளியீட்டுக்கென நியமிக்கப்பட்டுள்ள குழுவினால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே பிரசுரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் விடுதிகளை நிறுவ நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

654.4 மில்லியன் ரூபா செலவில் யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவ, மாணவிகளுக்காக புதிதாக விடுதிகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

400 கட்டில்களைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ள உத்தேச விடுதியின் நிர்மாண வேலைகள் 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஐந்து வருடகாலத்துக்குள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழகம் தற போது 6000 மாணவ, மாணவிகளுக்கு பட்டதாரிகள் மற்றும் பட்டப்பின்படிப்பு பாடத்திட்டங்களை வழங்கி வருகிறது. அவற்றுள் 1300 வெளியிட மாணவர்களும் உள்ளடங்குவர்.

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா இதனை முன்மொழிந்ததுடன் அமைச்சரவையும் இதற்கு அங்கீகாரம் அளித்துள்ளதாக அமைச்சர் கெஹலிய மேலும் தெரிவித்தார்.

# சனசமூக நிலையத்தின் பங்களிப்பால் மக்களுக்கு குழாய் மூலம் குடிநீர்

(கரணவாய்)

கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வதிரி அரசடிப் பகுதியில் உள்ள பழமை வாய்ந்த பொதுக்கிணறு புனரமைக்கப்பட்டு இப்பகுதியிலிருந்து ஆலங்கட்டை வரையான மக்களுக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வதிரிப் பகுதியில் உள்ள நூல் நிலையத்திற்கு முன்பாகவுள்ள 20 வருடங்கள் பழமை வாய்ந்த பொதுக்கிணறு மூலம் மேற்படி பிரதேச மக்களுக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக இக்கிணற்றை புனரமைப்பு செய்வதற்கு பிரதேச சபையினர் ஒப்பந்தகாரர்களுடன் பலமுறை கலந்துரையாடிய நிலையில் எவரும் இதற்கு ஒத்துழைக்கவில்லை. எனவும் இதனால் பிரதேச சபையினர் இதனை யார் செய்வது என நினைத்த நிலையில் கரணவாய் இளங்கோ சனசமூக நிலையத்தினர் தாமாகவே முன்வந்து இக்கிணறுக்கான புனரமைப்புப் பணிகளை செய்வதாக ஒப்பந்தம் செய்தனர். இதனை அடுத்து மேற்படி சனசமூக நிலையத்தினர் இக்கிணற்றுக்கு உட்பூச்சுப் பூசி 2 தண்ணீர் தாங்கிகளையும் அமைத்துள்ளதுடன் இப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தற்போது குடிநீர் விநியோகத்துக்கான குழாய் பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இதன் பின்னர் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடிநீர் விநியோகத்தை வழங்கிய இச் சனசமூக நிலையத்தின் செயற்பாடுகளை இப்பிரதேச மக்கள் பாராட்டியுள்ளதுடன் ஏனைய வீதிப்புனரமைப்பு உள்ளிட்ட வேலைகளையும் சனசமூக நிலையங்களுக்கு வழங்கினால் விரைவாக பணிகள் பூர்த்தியாக்கப்படும் எனவும் இதனால் மக்கள் பெரும் நன்மையடைவார்கள் என தெரிவிக்கின்றனர். (18)

# கடும் அரிசித் தட்டுப்பாடு பெப்ரவரிவரை ஏற்படும்

கடந்த 14 மாதங்களில் நிலவிய வ்றட்சியால் அடுத்த பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதியில் கடுமையான அரிசித் தட்டுப்பாடு ஏற்படும் என்று விவசாய அமைச்சின் செயலர் சகலசூரிய எச்சரித்துள்ளார்.

அரிசித் தட்டுப்பாட்டினால் அடுத்த சில வாரங்களில் விலை அதிகரிப்பு ஏற்படும். ஜனவரி, பெப்ரவரி அறுவடைக்குப் பின்னரே விலைகள் குறையக்கூடும்.

பண்டிகைக்காலத்தில் அரிசி விலை அதிகரிப்பதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்து அரசாங்கம் அரிசி ஏற்றுமதியை நிறுத்தியுள்ளதுடன். அரிசியை இறக்குமதி செய்யவேண்டிய நிலையும் ஏற்படலாம். மாதாந்த அரிசித்தேவை 198 ஆயிரம் மெட்றிக் தொன்னாக உள்ள நிலையில், தற்போது, 129 ஆயிரம் நெல் மட்டுமே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், கடும் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது. வடமத்திய, கிழக்கு, சப்ரகமுவ மாகாணங்களில், வறட்சியினால், 160 ஆயிரம் ஏக்கர் நெற் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், சுமார் 4 இலட்சம் மெட்றிக் தொன் நெல் உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

வானவில் இதழ் 23 தலையங்கத்திலிருந்து



**கூட்டமைப்பு தமது தேவை கருதி புலிகளாலேயே உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பாகும். அவர்கள் புலிகள் அழியும்வரை, புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறி வந்தவர்கள். அதுமாத்திரமின்றி, இறுதிக்கட்டப் போரின் போது புலிகள் ஒரு சிறிய பகுதிக்குள் இலட்சக்கணக்கான மக்களைத் தமது பாதுகாப்புக் கேடயமாகப் பிடித்து வைத்திருந்த போது, ஒரு தடவை தன்னும் அந்த அப்பாவி மக்களை விடுவிக்கும்படி இந்தக் கூட்டமைப்பினர் புலிகளிடம் கோரவில்லை. எனவே இவர்களும் போர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டியவர்களே.**

# போர்க் குற்றச்சாட்டு விசாரணை

## சரியான இலக்கை நோக்கி நகர வேண்டும்!

இலங்கையில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2009 மே மாதம் நடைபெற்ற இறுதிப் போரின் போது ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்ட விடயம், இப்போது எல்லோருமே ஏற்றுக் கொள்ளும் ஒரு உண்மையாகிவிட்டது. இதில் தொடர்ந்து சர்ச்சைக்குரிய விடயமாக இன்னமும் இருப்பது, யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பில் எந்தத் தரப்பு பொதுமக்களின் உயிரிழப்புகளுக்குப் பிரதான காரணகர்த்தாக்கள் என்பது தான். அத்துடன். போர்க்களத்தில் நேரடி மோதலில் ஈடுபட்ட அரச படைகளையும், புலிப் படைகளையும் தவிர, இந்தப் போரில் மறைமுகமாக அல்லது பின்னணியில் இருந்து பங்கு வகித்து, பொதுமக்களின் இழப்புகளுக்குக் காரணகர்த்தாக்களான பிற சக்திகள் எவையெவை என்பதும் இன்னொரு விடயமாகும்.

இந்த இறுதிப் போரில் மட்டுமின்றி, நாட்டில் 30 வருடங்களாக நடைபெற்று வந்த இனவாத யுத்தத்தில் உள்நாட்டுச் சக்திகள் மட்டுமின்றி, சில பிராந்திய, சர்வதேச வல்லரசுச் சக்திகளும், ஐக்கிய நாடுகள் சபையும் கூட சம்பந்தப்பட்டு வந்துள்ளன என்பதும் இரகசியமான விடயமல்ல.

இறுதிப் போரின் போது, புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட புலிகளின் பிரதான தலைமை அழிக்கப்பட்டதுடன், ஆயிரக்கணக்கான புலி உறுப்பினர்கள் அரச இராணுவத்திடம் சரணடைந்தனர். இறுதிக் கட்டப் போரின் போது உண்மையில் என்ன நடந்தது என்பதற்கு, அந்தப் போரின் போது புலிகளால் தமது பாதுகாப்பிற்காகப் பலவந்தமாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்து, பின்னர் அரச படைகளால் மீட்கப்பட்ட 3 இலட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் நேரடிச் சாட்சிகளாவர். ஆனால் போரின் போது நடைபெற்ற விடயங்களைக் கண்டறிவதற்கு, இந்த மக்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியினரைத் தன்னும் விசாரிப்பதற்கு இன்று வரை இலங்கை அரசு மீது தொடர்ச்சியாகப் போர் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வரும் சர்வதேச சக்திகள் முயன்றதாகத் தெரியவில்லை.

ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன், தருஸ்மன் என்பவர் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார். அந்தக் குழுவின் அறிக்கையில் அரச படைகள் மீதும், புலிகள் மீதும் பல போர்க் குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்தன. ஆனால் இலங்கை அரசை மட்டும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி, எல்லோரும் சுற்றி வளைத்துத் தாக்கி வந்த நிலையில், இப்பொழுது ஐ.நாவின் உள்ளக அறிக்கை என்ற ஒன்று 'கிணறு வெட்ட பூதம்' கிளம்பியது போல வெளிப்பட்டு, ஐ.நா அதிகாரிகளையே திருப்பித் தாக்கியுள்ளது. அந்த அறிக்கையின்படி, ஐ.நா இறுதிப் போரின் போது அப்பாவிப் பொதுமக்களைக் காப்பாற்றத் தவறிவிட்டது என்ற மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இப்படியான குற்றச்சாட்டு வந்த பின்னர், ஐ.நா இந்தப் பாரதூரமான தவறை இழைத்ததிற்குக் காரணமான அதிகாரிகளை முறைப்படி விசாரணைக்கு உட்படுத்தி, அவர்களுக்குத் தண்டனை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் இனிமேல் இப்படி நடந்து கொள்ளாமல் தவிர்ப்பதற்கு, இதை ஒரு படிப்பினையாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற அறிக்கையுடன், ஐ.நா தலைமை அதைக் கைகழுவிவிட்டது. ஐ.நா தலைமையின் இந்த மெத்தனப் போக்கை, எந்த சர்வதேச சக்திகளும் பாரதூரமாக எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. ஐ.நா செய்தது சரி என்றால், இலங்கையும் இனிமேல் இவ்வாறான மனித உரிமை மீறல்களில் ஈடுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் எனக் கூறி, போர்க் குற்றச்சாட்டுகளிலிருந்து அதை விடுவித்து விடலாம் தானே?

எது எப்படியோ, இந்தப்போரின்போது ஏற்பட்ட உரிமை மீறல்கள் மீதான குற்றச்சாட்டுகள் இலங்கை அரசு மீது மட்டும் சுமத்தப்பட்ட நிலை மாறி, இப்பொழுது ஐ.நாவும் அதில் சேர்க்கப்பட்டுள்ளது. அது ஒரு வகையில் நல்லதே. ஆனால் இன்னமும் சேர்க்கப்பட வேண்டிய குற்றவாளிகள் பலர் இருக்கின்றனர்.

முக்கியமாக போரின் ஒரு தரப்பாகவும், இறுதிப் போரில் ஆயிரக்கணக்கான மக்கள் இறப்பதற்குப் பிரதான காரணகர்த்தாக்களாகவும் இருந்த புலிகள், இந்தப் போர்க் குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிவிடமுடியாதுஅவர்களது தலைமை அழிக்கப்பட்டுவிட்டது என்பதற்காக அவர்கள் எக்காரணம் கொண்டும் தப்ப முடியாது. அவர்களது இரண்டாம் மட்டத் தலைவர்கள் சிலரும், முக்கியமான செயற்பாட்டாளர்களும் அரசாங்கத்தின் வசம் இருக்கிறார்கள். பொதுமக்களின் அழிவுக்கு புலிகளின் தலைவர் பிரபாகரன் தான் காரணகர்த்தா என, இலங்கையில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்கெய்ம் கூட அண்மையில் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் புலிகளின் நீட்சியாகப் பல புலம்பெயர் புலி அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன. போரில் இந்த சக்திகளின் பங்கு குறித்து தருஸ்மன் அறிக்கையும்கூட சுட்டிக் காட்டியுள்ளது.

இனப் பிரச்சினையை அரசியல் ரீதியாகத் தீர்க்காமல், அதை யுத்தமாக மாற்றி, 10 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் மக்கள் மேல் கொடூர யுத்தத்தை நடாத்திய ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசுகளில் பங்கு வகித்தவர்கள், இன்றும் அக்கட்சியின் தலைமையை அலங்கரித்து வருகின்றனர். முதலில் அவர்களிடமிருந்தே இந்தப் போர்க்குற்றச்சாட்டுகளை ஆரம்பிக்க வேண்டும்.

இவர்களைவிட, போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தக்கூடிய புலிகளின் பிரதிநிதிகள் இலங்கைக்குள்ளேயே இருக்கிறார்கள். அவர்கள் வேறு யாருமல்ல. தமிழ் தேசியக் கூட்டமைப்பினரே அவர்கள். கூட்டமைப்பு தமது தேவை கருதி புலிகளாலேயே உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பாகும். அவர்கள் புலிகள் அழியும்வரை, புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறி வந்தவர்கள். அதுமாத்திரமின்றி, இறுதிக்கட்டப் போரின் போது புலிகள் ஒரு சிறிய பகுதிக்குள் இலட்சக்கணக்கான மக்களைத் தமது பாதுகாப்புக் கேடயமாகப் பிடித்து வைத்திருந்த போது, ஒரு தடவை தன்னும் அந்த அப்பாவி மக்களை விடுவிக்கும்படி இந்தக் கூட்டமைப்பினர் புலிகளிடம் கோரவில்லை. எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் போர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டியவர்களே.

அத்துடன் இந்தப் போரைத் தொடர்ந்து நடாத்த வேண்டும் எனத் தென்னிலங்கையில் இயக்கம் நடாத்திய அனைத்து சிங்களப் பேரினவாத சக்திகளும்கூட போர்க் குற்றவாளிகளே. குறிப்பாக சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் போரை நிறுத்தி இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகச் சமாதான வழிகளில் தீர்வுகாண வேண்டும் என்பதற்காக, அவரது அரசாங்கம் 'வெண் தாமரை இயக்கம்' என்ற அமைப்பை உருவாக்கி சிங்கள மக்கள்மத்தியில் பெரியளவிலான பிரச்சார இயக்கத்தைமேற்கொண்டது. ஆனால் இதற்கெதிராகப் போரைத் தொடர வேண்டும் எனப் போட்டி இயக்கமொன்றை ஜே.வி.பி ஆரம்பித்ததுடன், சிங்களக் கிராமப்புறங்களில் இராணுவத்துக்கு இளைஞர்களைத் திரட்டும் பிரச்சாரத்தையும் மேற்கொண்டது. எனவே இந்தப் போர்க் குற்றங்களில் ஜே.வி.பிக்கும் பாரிய பங்குண்டு.

2000ஆம் ஆண்டில் சந்திரிகா கொண்டு வந்த நல்லதொரு அரசியல் தீர்வைக் குழப்பியதில், ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஹெல உருமய, விக்கிரமபாகு கருணாரத்ன என அனைவருக்கும் பங்குண்டு. சமாதானத் தீர்வைக் கொண்டுவர விடாமல் யுத்தத்தைத் தொடர வைத்த இக்கட்சிகள் போர்க் குற்றவாளிகள் இல்லையா?

இதேபோல, தமது பிழைப்புவாத அரசியலுக்காக அன்றிலிருந்து இன்றுவரை, இலங்கைத் தமிழரைப் போருக்குத் தூண்டி வந்த தமிழகத்தின் மு.கருணாநிதியிலிருந்து தொல்.திருமாவளவன் வரையிலான தமிழகசாக்கடை அரசியல்வாதிகளும் இந்தப் போர்க் குற்றங்களுக்கு உரியவர்களே.

எல்லாவற்றுக்கும் மேலாக 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற சுலோகத்தின் கீழ், இலங்கையில் போரை ஊக்குவித்து வந்த மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளும்,தனது அரசியல்தேவைகளுக்காக தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் இன்ன பிற உதவிகளும் வழங்கி ஆயுதப்போராட்டத்துக்கு வித்திட்டுவிட்டு, பின்னர் இலங்கை அரசின் பக்கம் நின்று யுத்தத்தை மறைமுகமாக வழிநடாத்திய இந்தியாவும் போர்க் குற்றவாளிகள் பட்டியலில் நிச்சயமாகச் சேர்க்கப்பட்டே தீர வேண்டும்.

இவ்வளவு குற்றவாளிகளும் இலங்கையில் நடைபெற்ற போரில் சம்பந்தப்பட்டிருக்க, உலகின் மிகவும் பயங்கரமான அமைப்பான புலிகள் இயக்கத்திடமிருந்து தமது நாட்டைப் பாதுகாப்பதற்காகப் போரிட்ட இலங்கை அரசின் படைகள் மீது மட்டும் போர்க் குற்றம் சுமத்துவது ஒருதலைப்பட்சமானதும் அநீதியானதுமாகும். எனவே போர்க் குற்றச்சாட்டு விசாரணை என்பது, 30 வருடப் போரையும் உள்ளடக்கியதாக இருப்பதுடன், அதில் சம்பந்தப்பட்ட சகலரையும் விசாரிப்பதாகவும் இருக்க வேண்டும்.

முதலில் இலங்கை அரசு மீது மட்டும் சுமத்திய குற்றச்சாட்டு, இப்பொழுது ஐ.நாவையும் உள்ளடக்கியுள்ளது வரவேற்கத்தக்கதே. இது மேலும் விரிவு பெற்று நாம் மேலே குறிப்பிட்ட அனைவரையும் உள்ளடக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

# அவசரகாலநிலை பிரகடனம் அவசியம் இல்லை என்கிறது அரசு



(கொழும்பு)

நாட்டின் கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு, அதனாலேற்பட்டுள்ள இடப்பெயர்வினால் பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் அவசர நிலைமையை பிரகடனம் செய்ய வேண்டிய அவசியமில்லையென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளதாவது,

நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை கருத்திற்கொண்டு அவசர நிலைமை அறிவிக்கப்படவில்லை.

இயற்கை அனர்த்தங்களினால் நாட்டுக்கு பாரியளவு பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அவசர நிலைமை பிரகடனம் செய்திருக்கலாம். எனினும், தற்போதைய நிலைமையை அரசாங்கத்தினால் சமாளிக்க முடியும்.

நிவாரணங்களை மக்களுக்கு உரிய முறையில் வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் அவசர நிலைமை அறிவிக்க முடியும்.

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் சகல வழிகளிலும் உதவிகளை வழங்கி வருவதாக அமைச்சர் அமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலை அடுத்து அவசர காலநிலையை பிரகடனப்படுத்த வேண்டுமென ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புனர்வாழ்வு பெற்றவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகள்

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 12000 முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு இவ்வாறு தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளன.

தேசிய அடையாள அட்டைகளும், ஏனைய முக்கிய ஆவணங்களும் இவ்வாறு வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போது வழங்கப்பட்ட தொழில்சார் பயிற்சிகளின் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

782 பேருக்கு இன்னமும் புனர்வாழ்வு அளிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# கைச்சாத்திட்டவர்களே விசாரணை; குற்றப்பிரேரணை குறித்து ஐ.தே.க.



(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணைக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி புதிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது. இந்த பிரேரணையில் கைச்சாத்திட்டவர்களே விசாரணை நடத்துபவர்களாகவும் உள்ளனர். இதற்கு அப்பாலும் முரண்பாடுகள் உண்டு என ஐ.தே.க கூறியது.

குற்றப்பிரேரணையை விசாரிப்பவர்களுக்கும் குற்றப்பிரேரணை செயன்முறையுடன் வேறு வகையில் தொடர்புள்ளவர்களுக்கும் இடையில் குடும்ப உறவுகள் காணப்படுகின்றன. இது இன்னொரு முரண்பாடு ஆகும் என ஐ.தே.க எம்.பி சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் கணவரான தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் தலைவருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் விசாரணை தொடக்கப்பட்ட முறை குறித்தே சேனசிங்க எம்.பி மேற்கண்டவாறு கூறினார்.

“கொடுக்கல் - வாங்கல் நடைபெறாத ஒரு விடயத்தில் விசாரணை தொடங்கப்பட்டது எவ்வாறு? நான் கிரேக்க முறிகள் விடயத்திலும் ஊழியர் சேமலாப நிதி தொடர்பிலும் பல முறைப்பாடுகளை செய்தேன். ஆனால், இவை தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலும், “த பினான்ஸ் கம்பனியில் முதலீடு செய்யும் தீர்மானம் சேமிப்பு வங்கியின் சபையினாலேயே மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறாயின், ஏன் ஏனைய சபை அங்கத்தவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை”

விமல் வீரவன்ச போன்றவர்கள், நீதித்துறையில் அதி உயர் அங்கத்தவரை விசாரித்தனர். இவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவரோ எதிரணி உறுப்பினர்களோ இல்லாத நிலையிலும் விசாரணையை முடித்துவிட்டனர்

அரசாங்கம் தனது செயல் மூலம் குற்றம் நிரூபிக்கப்படாத வரையிலும் நிரபராதி எனும் எடுகோளை தலைகீழாக்கிவிட்டது. நிரபராதி என நிரூபிக்கப்படாதவரை குற்றவாளி என்பதே இங்கு காணப்பட்ட எடுகோள்.

நாடாளுமன்றத்தில் தெரிவுக்குழு அறிக்கை தயாரிக்க முன்னர் அக்குழுவின் தலைவர் அந்த அறிக்கை பற்றி பகிரங்கமாக பேசிவிட்டார். கடாபி, முகாபே, இடி அமீன் மற்றும் முபாரக் போன்றோரின் பங்காரு நீதிமன்றத்தை இது நினைவூட்டுகின்றது என அவர் மேலும் கூறினார்.

# முதலை மழை?

நாட்டின் சில பகுதிகளில் மீன் மழை பெய்தமை தொடர்பான தகவல்கள் வெளியாகியிருந்தன. தற்போது மழையுடன் முதலைக் குட்டியொன்று வீழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் திஸ்ஸ மஹாராம பிரதேசத்தில் மழையுடன் இறால்கள் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது மாத்தறை சுல்தானாகொட கெகில்ல பிரதேசத்தில் பாரிய மழையுடன் முதலைக் குட்டியொன்று வீழ்ந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கே. பியதிஸ்ஸ என்வரின் வீட்டுக் கிணற்றிற்கு அருகாமையில் இந்த முதலைக் குட்டி வீழ்ந்துள்ளது.

இந்தக் கிராமத்திற்கு அருகாமையில் முதலைகள் வாழும் எந்தவொரு குளமோ அல்லது வேறும் நீர் நிலைகளோ கிடையாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கிராமத்திற்கு இதற்கு முன்னர் முதலைகள் வந்ததில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது

# ஆபத்தான நிலையில் நிதி நிலைமை

இலங்கையின் நிதி முறைமை மிகவும் பலவீனமாகவும், ஆபத்தான நிலையிலும் இருப்பதாக, சர்வதேச நிதி தர மதிப்பீட்டு நிறுவனமான பிட்ச் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நிறுவனம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை உள்ளிட்ட 14 நாடுகளுக்கு இந்த நிலைமை குறித்து பிட்ச் எச்சரித்துள்ளது.

இலங்கையில் பின்பற்றப்படுகின்ற நிதிக் கொள்கை மற்றும் நிதி நிலைமைகள் குறித்து, அதிக கரிசனை காட்டப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது

# அழிவின் விளிம்பிலுள்ள தாவர, விலங்கினங்கள்

(கொழும்பு)

இலங்கையில் பலவித விலங்குகள் மற்றும் தாவர வகைகள் அழிவின் விளிம்பில் உள்ளன அல்லது அழிந்துவிட்டதாக சுற்றுச்சூழல் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கே உரிய உயிரினங்கள் குறித்து அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் வெளியிட்டுள்ள ‘சிவப்பு அட்டவணை 2012’ எனும் அறிக்கையில் இலங்கையிலிருந்த 72 உயிரினங்கள் அழிந்து விட்டன அல்லது மறைந்து விட்டன என்பது கோடிட்டு காட்டப்பட்டுள்ளது.

சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமான இனங்கள் குறித்து அரசின் அந்த சிவப்பு அட்டவணையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த உயிரினங்களின் இருப்பின் அடிப்படையில், அவை பல குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

அழிந்து விட்டவை, அழிவின் விளிம்பில் இருப்பவை, மிகவும் பலவீனமான நிலையில் உள்ளவை, அண்மைக் காலங்களில் அளவில் பெருகியுள்ளவை என அவை பட்டியலிடப்பட்டுள்ளன.



மட்டக்களப்பு மாவட்டத்தின் பாசிக்குடாப் பகுதியில் இருந்த ஒரு வகையான கண்டல் தாவரமும், கரடியனாறு பகுதியில் தும்பாலை எனப்படும் ஒருவகை மரமும் முற்றாக காணாமற் போயுள்ளன.

இதேபோல ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு வகையான தாவரங்கள் காணாமற் போயுள்ளதைக் கண்டுபிடிக்கக் கூடியாத இருக்கும் என கிழக்கு பல்கலைகழகத்தின் தாவரவியல் பேராசிரியரான கலாநிதி தங்கமுத்து ஜெயசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த சிவப்பு அட்டவணை அல்லது புத்தகமே அரசுக்கு ஒரு எச்சரிக்கையாக அமைகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார். அழிவின் விளிம்பில் உள்ள இனங்களை காப்பாற்ற அடுத்து என்ன செய்யலாம் எனவும் வல்லுநர் குழு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

அபிவிருத்தி, யுத்தம் போன்ற பல காரணங்களாலேயே பல இனங்கள் அழிந்தோ அல்லது அழிந்து போகக் கூடிய நிலையிலோ உள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்

# சிலாபம் வைத்தியசாலையிலிருந்து 300 நோயாளர்கள் இடமாற்றம்

தொடரும் ,மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கை அடுத்து சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த 300 நோயாளர்கள் நேற்றைய தினம் புத்தளம் றாகம போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

தொடரும் கடும் மழையால் மாவட்டத்திலுள்ள தெதுரு ஓயா, ஆறு மற்றும் ஆராச்சிகட்டுவ, மஹாவேவ ஆகிய குளங்கள் நிரம்பி வெள்ளம் பாய்கின்றன. இதனால் சிலாபம் வைத்தியசாலையும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதனையடுத்து வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த 300 நோயாளர்கள் அம்புலன்ஸ் வண்டிகள் மூலம் றாகம போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இதேவேளை சிலாபம் நகரம், பிரதான பேருந்து நிலையம், புத்தளம், சிலபாம் பிரதான வீதி மற்றும் ரயில் வீதி என்பன முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதனால் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவரைக் காணவில்லை

(மாத்தளை)

மாத்தளை ரத்தொட்ட பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரத்தொட்ட நிகலோயா கீழ்ப்பிரிவில் மண்சரிவு ஏற்பட்டதை அடுத்து குறித்த ஆறு பேரும் காணாமற் போயிருந்தனர். இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பாக ரத்தொட்ட பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்முகம் லெச்சுமி (வயது - 52), சம்முகன் சரோஜா (வயது- -54 ), சம்முகன் சதாசிவம், (வயது - 50) வைரபெருமாள் ப்ரியதர்ஷனி (வயது 24), வைரபெருமாள் சவானி (வயது - 21) வைரபெருமாள் சர்மிளா (வயது- 18) ஆகியோரே இவ்வாறு காணாமற் போயுள்ளனர்.

# கலை இலக்கியத்துறை மேம்பாட்டிற்கு அமைச்சர் டக்ளஸ் ஆதரவு அளப்பரியது

## வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

மக்களின் துன்ப துயரங்களில் பங்கெடுத்து மக்களுக்காகவே தொடர்ச்சியாக பணியாற்றி வருபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

நல்லூரில் அமைந்துள்ள நல்லதம்பி சிவசுப்பிரமணியம் அரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தமிழ் இலக்கியப் பெருவிழாவில் கலை மற்றும் இலக்கியத் துறைகளில் சாதித்த கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் தலைமைதாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் கலை, இலக்கியத்துறைகளில் சாதித்த கலைஞர்கள் ஆண்டுதோறும் கௌரவிக்கப்பட்டுவரும் நிலையில் இவ்வாண்டும் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.


கல்வி, கலை இலக்கியத்திற்கு அமைச்சர் எமக்கு பூரண ஆதரவு வழங்கி வருவதோடு, வழிகாட்டியாகவும் இருந்து வருகின்றார். எமது மக்கள் பல்வேறு துன்பதுயரங்களை அனுபவித்த வேளைகளிலெல்லாம் மக்களோடிருந்து தொடர்ச்சியாக அம்மக்களது துயர்துடைத்து வருகின்றவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எனத் தெரிவித்தார்.

நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி உரையாற்றும் போது வடமாகாணத்திலுள்ள கலை இலக்கியவாதிகளை ஊக்குவிக்கும் முகமாகவும், மேலும் வளர்த்தெடுக்கும் முகமாகவும் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இதனூடாகவே இம்மாகாணத்தைச் சேர்ந்த கலைஞர்களும் இன்றையதினம் கௌரவிக்கப்படுகின்றனர்.

அந்தவகையில், வடமாகாணத்தில் சிறந்த கலைஞர்களைத் தெரிவு செய்வதற்காக குழுவொன்றின் மூலமாக இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் மகிந்த சிந்தனையின் பிரகாரம் இவ்வாறான கலைஞர்களை ஊக்குவிப்பதிலும் அவர்களை வளர்த்தெடுப்பதிலும் அமைச்சர் இணைந்து பல செயற்றிட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளார். எதிர்காலங்களிலும் இவ்வாறான கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

இதன்போது வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, உள்ளிட்ட துறை சார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

கௌரவிக்கப்பட்ட கலை, இலக்கியவாதிகளுக்கு அமைச்சர் மற்றும் வடமாகாண ஆளுநர் ஆகியோர் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.



வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் தரம் - 1 மாணவிகளின் வரவேற்பு நடனத்தைக் காணலாம்.

# மாற்று வலுவுடையோருக்கான சுய உதவிக்குழு தெரிவு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மாற்று ஆற்றலுடையோருக்கான சுய உதவிக் குழுவை தெரிவு செய்வதற்கான ஒன்று கூடல் நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் மாவட்டக் குழுவின் தலைவராக வி.குருபகராசா, உபதலைவராக ஏ.நங்கடம்பநாதன், செயலாளராக செல்வி நடராஜா விஜயலட்சுமி, உப செயலாளராக அன்ரன்குயின், பொருளாளராக மோ.நந்தகுமார் ஆகியோரும் மேலும் 30 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

# முரசின் இன்றைய பலன்

(21.12.2012 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 06 ஆம் திகதி. நட்சத்திரம் உத்தரட்டாதி பிற்பகல் 2.48 வரை. திதி நவமி பின்னிரவு 5.13 வரை.
இராகுகாலம் 10.55 12.21 வரை. சித்தாமிர்தம்
சுபநேரம் 6.25 - 7.55 வரை. கரிநாள்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனதில் உண்டான பயம் நண்பரால் விலகும். வேலைப் பளு. பணவரவு சுமார். கணவன்-மனைவிக்குள் வீண் சந்தேகம். எதிர்பார்த்தவை தாமதம். பிள்ளைகளால் சிக்கல். |
| ரிஷபம் | செயல்களில் கவனச்சிதறல் ஏற்படலாம். பொறுமை நன்மைபெற உதவும். தொழில், சுமார். மிதமான பணவரவு. பயணம் கவனம். குடும்பம் அனுசரிக்கும். எதிர்வந்த சிரமம் விலகும். |
| மிதுனம் | ஒருமுகத் தன்மையுடன் செயல்பாடு. பலரும் பாராட்டுவர். தொழில், வளர்ச்சிநிலை. எதிர்பார்த்த பணவரவு. சுப நிகழ்ச்சி திட்டம். வாழ்க்கைத்துணை வழியில் உதவி. நன்மை. |
| கடகம் | எதிர்ப்படுகிற சிரமங்களை வெல்வீர்கள். தைரியம் வளரும். தொழில், அபிவிருத்தி. ஆதாய பணவரவு. நண்பருக்கு உதவி. விருந்து, விசேஷம். மாணவர்களுக்கு வெற்றி நாள். |
| சிம்மம் | நண்பர், உறவினரை ஊக்கப்படுத்துவீர்கள். உங்கள் நன்மதிப்பு உயரும். தொழில், சீர்திருத்தம். உபரி வருமானம். புத்திரர் மகிழ்விப்பர். வெளியூரிலிருந்து சுப செய்தி. |
| கன்னி | அறப்பணி ஈடுபாடு. அரசு உதவி அனுகூலம். தொழில் இடையூறு விலகும். கூடுதல் லாபம் கிடைக்கும். நட்பு பாராட்டு. உடல்நலம் பலம் பெறும். குடும்ப உல்லாசம். அமைதி மனம். |
| துலாம் | நண்பர்களோடு அதிக நேரம். தொழில், சிக்கல் விலகும். வரவை விட செலவு கூடும். உடல்நலம் மந்தம். அறிமுகம் இல்லா இடத்தில் புக வேண்டாம். குடும்பத்தில் ஒற்றுமை. |
| விருச்சிகம் | சொந்த நலன் தியாகம். எதிர்ப்புகள் சமரசமாகும். தொழில் திட்டமிட்டு வளர்ச்சி. பணவரவும், நன்மையும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். தொட்டது துலங்கும். ஜெயம். |
| தனுசு | திட்டமிட்ட பணிகள் நிறைவேறும். செய்த உதவிக்கு நற்பலன் தேடிவரும். தொழில், அபிவிருத்தி. ஆதாய பணவரவு. உறவினர்களிடம் மனக்கிலேசம் விலகும். யோகமான நாள். |
| மகரம் | தெய்வீக சிந்தனை. அறிமுகம் இல்லாதவருக்கும் உதவுவீர்கள். தொழில் சிறந்து வாழ்க்கைத் தரம் உயரும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு. பிள்ளைகள் பாசம். சாந்தம். |
| கும்பம் | செயல்களில் நேர்த்தி. தொழில் வளர்ச்சி. தாராள பணவரவு. உறவினர், நண்பர்கள் தேடி வருவர். உடல் ஆரோக்கியம் பெறும். சொத்து சேர்க்கை. எதிர்காலத் திட்டமிடல். |
| மீனம் | சொந்த நலனில் அக்கறை. எதிர்ப்புகள் வரும். தொழிலில் தாமதங்கள். அளவான பணவரவு. சேமிப்பு பயன்படும். எதிர்பார்த்த உதவி வரத் தாமதம். அதிக நேரப் பணி. |

# வீதிக்கு குறுக்காக பாயும் ஆற்று நீர் போக்குவரத்து பெரும் பாதிப்பு

(மன்னார்)

மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் தொங்குபாலத்திற்கு அருகாமையில் உள்ள பிரதான வீதியில் சுமார் 12 அடிக்கு மேல் ஆற்றுநீர் பாய்ந்து கொண்டிருப்பதாக குஞ்சுக்குளம் பங்குத் தந்தை அருட்திரு லக்டன் டி சில்வா தெரிவித்தார்.

இதனால் வாகனம் மற்றும் மக்களின் போக்குவரத்துக்கள் பெரியளவில் பாதிப்படைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மடு பிரதான வீதியிலிருந்து பெரிய குஞ்சுக்குளம், மாதா கிராமம், பெரிய முறிப்பு ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதிகளில் தற்போது திருத்த வேலைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அப்பகுதியூடாகக் காணப்படும் கட்டுக்கரைக் குளத்தின் துருசு பல வருடங்களாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்த நிலையில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மழை வெள்ளம் காரணமாக குஞ்சுக்குளம் பகுதியில் உள்ள ஆறு பெருக்கெடுத்துள்ளது.

இதனால் குஞ்சுக்குளம் தொங்கு பாலத்திற்கு அருகாமையில் உள்ள பிரதான வீதியூடாக ஆற்று நீர் சுமார் 12 அடிக்கு மேல் பாய்ந்து கொண்டிருக்கின்றது.

இதனால் வாகனம் மற்றும் மக்களின் போக்குவரத்துக்கள் தற்போது பெரிதளவில் பாதிப்படைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் வாழ்வகத்தினால் பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கண் பார்வையற்ற அல்லது சாதாரண எழுத்தை இயல்பாக வாசிக்க முடியாத அளவுக்குப் பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளின் பெற்றோர் தமது பிள்ளைகளை இணைத்துக் கொள்வது தொடர்பாக தலைவர், வாழ்வகம் சபாபதிப் பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியுடனோ அல்லது 021 2240146 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ உடன் தொடர்பு கொள்ளவும்.

அனுமதி பெறும் பிள்ளைகளுக்கான உணவு, உடை, உறைவிடம், கல்விச் செலவுகள், கல்விக்கான விசேட உபகரணங்கள் யாவும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் என வாழ்வகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

# சந்தையில் பலசரக்கு வியாபாரம் தொழில் பாதிப்படைவதாக விசனம்

(கரணவாய்)


வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் வர்த்தக சங்கத்தின் கீழ் உள்ள மரக்கறிச் சந்தையில் பலசரக்கு வியாபாரம் நடைபெறுவதால் தமது வியாபாரம் பாதிப்படைந்துள்ளதாக பலசரக்கு வியாபாரம் செய்கின்ற கடை உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அவர்கள் இது தொடர்பாக தெரிவிக்கையில், மேற்படி பிரதேச சபையின் கீழ் உள்ள மரக்கறிச் சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்வோர் நான்கு கடைகளை உருவாக்கி பலசரக்கு வியாபாரம் செய்து வருகின்றனர்.

ஆனால் பலசரக்கு வியாபாரம் செய்யும் நாம் கடை வாடகை, முற்பணம், ஊழியர் சம்பளம், வங்கிக் கடன்வட்டி, வருமான வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் மாதாந்த வரி எனப் பல அறவீடுகளைச் செலுத்தி வியாபாரம் செய்து வருகின்றோம்.

இந்த நிலையில் மேற்படி நடவடிக்கையால் நாம் வியாபார ரீதியில் பாதிப்படைந்துள்ளோம். இந்த நிலை தொடர்ந்தால் நாம் நஷ்டத்தை எதிர்நோக்கவேண்டி ஏற்படுவதோடு இதற்கு மாற்றீடாக எங்களுக்குப் பலசரக்கு கடைகளில் மரக்கறி வியாபாரம் செய்வதற்கு அனுமதி தர வேண்டும். அவ்வாறில்லையாயின் மரக்கறிச் சந்தையில் பலசரக்கு வியாபாரம் செய்வதை நிறுத்தித் தரவேண்டும். எமக்கு வழி செய்துதரவேண்டும் என அந்த வர்த்தகர்கள் பிரதேச சபையிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். (18)

## கேலிக்குரிய குற்றச்சாட்டு



(சிட்னி)

பந்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டுக்கள் கேலிக்குரியது. முதலாவது போட்டியில் அணியின் வெற்றிக்கு அதிக பங்காற்றியிருப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன் என அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பீற்றர் சிடில் தெரிவித்தார்.

முதலாவது டெஸ்ட் போட்டியின் போது முதலாவது இனிங்ஸில் ஒளிபரப்பான காட்சிகளின் அடிப்படையில் பந்தினை பீற்றர் சிடில் தனது நகத்தைப் பயன்படுத்தி சேதப்படுத்துவது போன்று காணப்பட்டது. கிரிக்கெட் விதிகளின்படி இதுதவறாகும். இதனையடுத்து இலங்கைக் கிரிக்கெட் அணியின் முகாமையாளர் சரித் சேனநாயக்க இதுகுறித்து போட்டி மத்தியஸ்தரிடம் உத்தியோக பூர்வமற்ற முறையில் முறையிட்டிருந்தார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள கிறிஸ் ப்ரோட், குறித்த சம்பவம் தொடர்பாக ஆராயப்பட்டதாகவும், பந்து சேதப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் எவையும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை எனவும், அதன் காரணமாக இக்குற்றச்சாட்டுக்களிலிருந்து பீற்றர் சிடில் விடுவிக்கப்படுவதாகவும் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், அது குறித்து கருத்துத் தெரிவித்த பீற்றர் சிடில், மைதானத்தைச் சூழ 15இற்கு மேற்பட்ட கமராக்கள் காணப்படும் நிலையில் அவற்றிலிருந்து தப்ப முடியும் எனத் தான் கருதவில்லை எனவும், எப்போதும் விளையாட்டு விதிகளினடிப்படையில் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெறுவதையே விரும்புவதாகத் தெரிவித்தார்.

தன் மீதான கேலிக்குரிய குற்றச்சாட்டுக்களை மறுப்பதாகத் தெரிவித்த பீற்றர் சிடில், தற்போது தன் மீது தவறுகள் கிடையாது என நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## வெல்லும் திறமை உண்டு




பந்தைச் சேதப்படுத்தாமல், விதிகளை மீறாமல் டெஸ்ட் போட்டிகளில் வெற்றிகளைப் பெற்றுக் கொள்ளும் திறமை அவுஸ்ரேலிய அணிக்கு உண்டு என இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் பீற்றர் சிடில் உட்பட சில அவுஸ்ரேலிய வீரர்கள் பந்தைச் சேதப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது. அது தொடர்பான உத்தியோகப்பூர்வமற்ற முறைப்பாடும் இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமையாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த சம்பவம் தொடர்பாக ஆராய்ந்த போட்டி மத்தியஸ்தர் கிறிஸ் ப்ரோட், அவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றமைக்கான போதிய ஆதாரங்கள் காணப்படாததால் பீற்றர் சிடில் மீதோ, ஏனைய அவுஸ்ரேலிய வீரர்கள் மீதோ விசாரணை மேற்கொள்ள முடியாது என அறிவித்திருந்தார். இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பாகக்கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன, குறித்த சம்பவம் தொடர்பாக போட்டி மத்தியஸ்தர் என்னுடன் வந்து கலந்துரையாடினார். அவரே பந்தைச் சேதப்படுத்துதல் தொடர்பான சம்பவமொன்று இடம்பெற்றதாகச் சந்தேகிப்பதாக என்னிடம் தெரிவித்தார். அது குறித்துக் கவலைப்படத் தேவையில்லை என அவர் தெரிவித்தார். இவ்வாறான பந்தைச் சேதப்படுத்துதல், விதிகளை மீறுதல் போன்றவற்றில் ஈடுபடாமல் போட்டிகளில் வெற்றிபெறும் திறமை அவுஸ்ரேலிய அணிக்கு உண்டு என்பதை நான் நம்புகின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.



மும்பையில் நேற்று முன்தினம் நடந்த தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற, இந்தியாவின் ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சாவைக் காணலாம்.

## சரியான நேரம் இல்லை



(புதுடில்லி)

விராட் ஹோலி மிகச் சிறந்த வீரர் என்பதில் சந்தேகம் இல்லை. நாட்டுக்காக அவர் சிறப்பாக ஆடி வருகிறார். ஆனால் அவர் மிகவும் இளமையான வீரராக இருப்பதால் கப்டனுக்கு தற்போது தகுதியானவர் இல்லை. டெஸ்ட் கப்டன் பதவி வழங்கினால் அவரால் சிரேஷ்ட வீரர்களை சமாளிப்பது கடினம் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவ் தெரிவித்தார். டோனியை மாற்றினால் மட்டும் அணி சரியாகிவிடாது. ஒட்டு மொத்த டெஸ்ட் அணியுமே கடந்த ஒரு ஆண்டாக மோசமாக உள்ளது. சிரேஷ்ட வீரர்களில் யார் ஹோலியை ஆதரிப்பார்கள். வீராட் ஹோலிக்கு கப்டன் பதவி வழங்க இது சரியான நேரம் இல்லை. எதிர்காலத்தில் வழங்கலாம். அவருக்கு அதற்கான ஆற்றல் இருப்பதை நான் மறுக்கவில்லை. இருப்பினும் தற்போதைய நிலையில் தலைமைத்துவத்தில் அவருக்கு போதிய அனுபவம் இல்லை. இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் அவருக்குத் தலைமைப் பதவியை வழங்கினால் நிச்சயம் அவர் சிறப்பாக செயற்படுவார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பயிற்சியாளர் மீது அதிருப்தி

(புதுடில்லி)

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-1 என கைப்பற்றியது. சொந்த மண்ணில் தொடரை இழந்த இந்திய அணிக்கு எதிராக கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. கப்டன் டோனியை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்துள்ளது. ஆனால், வீரர்களோ பயிற்சியாளர் மீது அதிருப்தியில் உள்ளனர்.

பயிற்சியாளர் பிளெட்சரின் பணிகளில் திருப்தி அடையாத சில வீரர்கள் தங்கள் அதிருப்தியை பி.சி.சி.ஐ. மூத்த அதிகாரிகளிடம் தெரிவித்து, இதுபற்றி ஆலோசனை நடத்தியுள்ளனர். ஆனால், அதிகாரபூர்வமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை எனத் தெரிகிறது.

இதற்கு முன்பு பயிற்சியாளராக இருந்த ஹரி கிர்ஸ்டன், கடந்த ஆண்டு இந்தியா உலகக் கோப்பையை வென்றபிறகு தனது ஒப்பந்தத்தை நீடிக்காமல் விடைபெற்றார். இதனையடுத்து கிர்ஸ்டன் பரிந்துரையின்பேரில் பிளெட்சர் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

ஆனால், இங்கிலாந்து மற்றும் அவுஸ்ரேலியாவில் அடுத்தடுத்து 8 டெஸ்ட் போட்டிகளில் தோல்வியடைந்த இந்திய அணி, சொந்த மண்ணில் பிளெட்சரின் தலைமையில் மிகப்பெரிய அவமானத்தை சந்தித்துள்ளது. எனவே, அவரது ஒப்பந்தத்தை புதுப்பிக்கும் வாய்ப்பு மிகவும் குறைவு எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சச்சினுக்கு ஆதரவு

(கொல்கத்தா)

கிரிக்கெட்டில் சச்சின் தொடர்ந்து விளையாட வேண்டும். இவரை ஓய்வு பெறச்சொல்வது பைத்தியக்காரத்தனம் என, உலக சதுரங்கச் சம்பியன் விஸ்வநாதன் ஆனந்த் தெரிவித்தார்.

விமர்சனங்கள் வருவது நல்லது தான். ஆனால், தொடர்ந்து விளையாட ஆர்வமாக உள்ள நிலையில், நிறுத்த வேண்டும் எனச் சொல்வது பைத்தியக்காரத்தனமாக உள்ளது. அதிலும் விளையாட்டில் இளைஞன் என்பது சாதகம் என்ற கேள்விக்கே இடமில்லை. என்னைப் பொறுத்தவரையில் இன்னும் சதுரங்கம் விளையாடவே விரும்புகிறேன். அதேநேரம், இத்தனை கோப்பை தான் வெல்ல வேண்டும் என்ற எந்த இலக்கும் கிடையாது.

தொடர்ந்து சதுரங்கம் விளையாட வாய்ப்புக் கிடைத்தது அதிர்ஷ்டம் தான். இவ்விடயத்தில் சச்சின் போலத் தான் நானும். வயது என்பதெல்லாம் வெறும் நம்பர் தான். அது ஒரு பொருட்டே அல்ல. ஆனால், எப்போது ஓய்வு பெறுவீர்கள் என்பது தான் முதல் கேள்வியாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## பீற்றர்சனின் ஒப்பந்தம் நீடிப்பு

இங்கிலாந்து அணி வீரர் கெவின் பீற்றர்சனின், ஒப்பந்த காலம் நீடிக்கப்படவுள்ளது. தென்னாபிரிக்க வீரர்களுக்கு, "டுவிட்டரில்" அவதூறு செய்தி அனுப்பிய இங்கிலாந்து வீரர் பீற்றர்சன், அணியில் இருந்து நீக்கப்பட்டார். வீரர்கள் ஒப்பந்த பட்டியலிலும் சேர்க்கப் படவில்லை. பின் நடந்த ருவென்ரி-20 உலக கோப்பை தொடரில் நடப்பு சம்பியனாக களமிறங்கிய இங்கிலாந்து அணி, இலங்கையில் மண்ணைக் கவ்வியது. இதனால், இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்காக, நான்கு மாதம் மட்டும் ஒப்பந்தம் செய்யப்பட்டார். இது விரைவில் முடியவுள்ளது. தவிர, இந்திய தொடரில் அவர் அசத்தியதால், மீண்டும் ஒப்பந்தம் நீடிக்கப்படுகிறது. இதுகுறித்து பயிற்சியாளர் அண்டி பிளவர் கூறுகையில், பீற்றர்சன் சிறப்பான வீரர். இந்திய தொடரில் விரைவாக ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம் இந்திய பந்துவீச்சாளர்களுக்கு நெருக்கடி கொடுத்தார். இது தொடரை வெல்ல பெரும் உதவியாக இருந்தது. இவருக்கு ஒப்பந்தம் எல்லாம் ஒரு பிரச்சினையல்ல. இதுகுறித்து கூட்டத்தில் விவாதிக்கப்படும். மற்றபடி அனைத்தையும் வெளியில் கூறமுடியாது என்றார்

## சிறந்த வீரராகத் தெரிவு



சுவிட்சர்லாந்தின் 2012ஆம் ஆண்டுக்கான சிறந்த விளையாட்டு வீரராக ரென்னிஸ் நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விளையாட்டு நிபுணர்கள், பொதுமக்கள் அனைவரும் வாக்களித்து 43.9 சதவிகிதம் என்ற அடிப்படையில் இவருக்கு இவ்விருது கிடைத்துள்ளது.


உலகத்தரவரிசையில் இரண்டாம் இடத்தில் உள்ள இவர் 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

இந்த விருதை அவர் 5ஆவது முறையாக பெறுகிறார். இதற்கு முன்னர் 2003, 2004, 2006, 2007 ஆகிய வருடங்களில் பெற்றுள்ளார்.

இவருடன் இவ்வாண்டுக்கான விருதை ஒலிம்பிக் டிரையத்லானில் தங்கப்பதக்கம் வென்ற சுவிஸ் வீராங்கனை நிகோலா ஸ்பிரிக்கும் பெற்றார்.

விருது வென்றமை குறித்து கருத்துத் தெரிவித்த பெடரர், ஐந்தாவது தடவையாக இந்த விருதை வென்றமை குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். தொடர்ந்தும் சிறப்பான செயற்பாடுகளை வெளிப்படுத்து தாய் நாட்டிற்குப் பெருமை தேடிக் கொடுப்பேன். ஓய்வு குறித்து தற்போது சிந்திக்கவில்லை. ரென்னிஸ் தொடரில் இன்னும் சில ஆண்டுகள் என்னால் சிறப்பாக விளையாட முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. உடற்தகுதி உடமளிக்கும் வரையும் விளையாட விரும்புகின்றேன் எனவும் தெரிவித்தார்.

## நீடிக்கப்பட்டது ஒப்பந்தம்



ஆர்ஜென்ரீன கால்பந்து நட்சத்திர வீரர் மெஸ்ஸி 2018ஆம் ஆண்டு வரை பார்சிலோனா கிளப் அணிக்காக விளையாடும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

ஸ்பானிஷ் கால்பந்து லீக் தொடரில் பார்சிலோனா கிளப் அணிக்காக விளையாடி வரும் மெஸ்ஸியின் ஒப்பந்தம் வரும் 2016ஆம் ஆண்டு வரை நிறைவடையும்படி முதலில் இருந்தது.

ஒப்பந்தகாலம், மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கும் வகை யில் புதியஒப்பந்தத்தில் மெஸ்ஸிகையெழுத்திட்டுள்ளதாக அவ்வணி யின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் பார்சிலோனா அணியின் அணித்தலைவர் கார்லேஸ் புயே-ால் (ஊயுசுடுநுளு ீருலுழுடு) மற்றும் மத்திய கள ஆட்டக்காரர் ஷேவி ஹர்மஸ்டேஸ் (ஓயுஏஐ ர்நுசுஆயுே-னுநுணு) ஆகியோரின் ஒப்பந்தமும் நீட்டிக்கப்பட்டுள்ளதாக பார்சிலோனா கிளப் அணி தெரிவித்துள்ளது.

இவர்களின் ஒப்பந்தம் நீடிக்கப் பட்டதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். இன்றைய உலகில் இவர்கள் போன்ற வீரர்களை தக்கவைத்துக்கொள்ள ஏனைய கழகங்கள் தயாராகவே உள்ளது என பார்சிலோன கழக முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

# கிண்ணம் வென்றது

## ஆவரங்கால் மத்தி, காங்கேசன்துறை ஐக்கியம்

(பன்னாலை)

ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடரின் யாழ். மாவட்ட கிண்ணத்தை ஆவரங்கால் மத்தி மற்றும் காங்கேசன்துறை ஐக்கியம் ஆகிய அணிகள் கைப்பற்றிக் கொண்டன.

ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடரில் பிரதேச ரீதியாக வெற்றிபெற்ற அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்டப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பன்னாலை கணேசன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் ஒழுங்கு படுத்தலில் இடம்பெற்ற இப்போட்டி ஆண், பெண் என இரு பிரிவினருக்குமிடையில் இடம்பெற்றது.

ஆண்கள் அணிகளுக்கிடையிலான முதலாவது அரையிறுதிப் போட்டியில் பன்னாலை கணேசன் அணியும், மட்டுவில் ஐங்கரன் அணியும் மோதின. மூன்று செட்களைக் கொண்ட இப்போட்டியில் கணேசன் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியும், அரியாலை ஐக்கியம் அணியும் மோதின. இதில் ஆவரங்கால் மத்தி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் பன்னாலை கணேசன் அணியும், ஆவரங்கால் மத்தி அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதலிரு செட்களை ஆவரங்கால் மத்தி வெற்றிபெற்று முன்னிலை வகித்தது. தொடர்ந்து மூன்றாவது செட்டை பன்னாலை கணேசன் அணி வெற்றிபெற்று, அதன் ஆதரவாளர்களை உற்சாகப்படுத்தியது. தொடர்ந்தும் இடம்பெறும் இரு செட்களையும் கணேசன் அணி வென்று சொந்த மண்ணில் கிண்ணத்தை கைப்பற்றும் என அதன் ஆதரவாளர்களால் நம்பப்பட்டது. இருப்பினும் இதன் பின்னர் சுதாகரித்துக் கொண்ட ஆவரங்கால் மத்தி, மிகவும் சிறப்பாக ஆடி, நான்காவது செட்டைக் கைப்பற்றிக் கிண்ணத்தை வென்றது. இறுதியில் ஆவரங்கால் மத்தி அணி 25-12, 25-19, 22-25, 25-14 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தை வென்றது. இதன் மூலம் ஜனவரி மாதம் இடம்பெறும் தேசிய மட்டப் போட்டிக்கு ஆவரங்கால் மத்தி அணி தகுதிபெற்றுள்ளது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கியம் அணியும், கோப்பாய் ஐக்கிய அணியும் மோதின. யாழ். மாவட்டத்தில் பெண்கள் கரப்பந்தில் பல கிண்ணங்களை வென்று காங்கேசன்துறை ஐக்கியம் அணி தனித்துவமாக திகழ்ந்து வருவதுடன், சீராசக்தி தேசிய கரப்பந்து அணி மற்றும் தேசிய இளைஞர் சேவை மன்ற தேசிய அணியில் பல வீரர்கள் அங்கம் வகிப்பதாலும் காங்சேன்துறை ஐக்கிய அணியே கிண்ணம் வெல்லும் என போட்டி தொடங்குவதற்கு முன்னரே நம்பப்பட்டது. அந்த எதிர்பார்ப்பிற்கு ஏற்றவாறே போட்டியில் ஆதிக்கம் செலுத்திய காங்கேசன்துறை ஐக்கியம் அணி, கோப்பாய் ஐக்கிய அணியை புரட்டியெடுத்தது. ஐந்து செட்களைக் கொண்ட இப்போட்டியை 25-18, 25-17, 25-12 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று, மூன்றாவது முறையாகவும் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் ஏராளமான கரப்பந்தாட்ட இரசிகர்கள் போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத் தக்கது. (93)

## பிற்போடப்பட்டது மத்தியஸ்தர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடாத்தப்படவிருந்த கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான தமிழ் மொழி மூலமான பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவிருந்த இப்பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் ஜனவரி மாத நடுப்பகுதியில் இப்பரீட்சை நடைபெறும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இப்பரீட்சையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் தோற்றவிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் தரம் ஒன்று முதல் மூன்று வரையிலான மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சையாக இடம்பெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## அரையிறுதியில் யங்ஹென்றீஸ், சென். அன்ரனீஸ்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும்கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிக்கு யங்ஹென்றீஸ் மற்றும் சென். அன்ரனீஸ் அணிகள் தகுதிபெற்றுள்ளன.

வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக்கழகம், யாழ். மாவட் டத்தில் 46 விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் கால்பந்தாட்டத் தொடரை நடத்தி வருகின்றது. இப்போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் கடந்த வாரம் ஆதிசக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

முதலாவதாக நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் யங்ஹென்றீஸ் அணியினை எதிர்த்து அண்ணா சிலையடி அணி மோதியது. மேற்படி போட்டியில் யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழக அணி 3 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இரண்டாவதுபோட்டியில் நவஜீவன் அணியினை எதிர்த்து சென்.அன்ரனீஸ் மோதியது. போட்டி முடியும்போது இரு அணிகளும் தலா 1 கோல்களினை போட்டனர். இதனால் சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் 3 : 0 என்ற கோல் கணக்கில் சென்.அன்ரனீஸ் அணி வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

## கால்பந்து போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். கால்ப்ந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களின் 22 வயதுப் பிரிவினருக்கிடையிலான அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற் றுப் போட்டியொன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 11, 12, 13 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ள மேற்படி கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 15 விளையாட்டுக்கழகங்களின் அணிகள் பங்குபற்றவுள்ளதாக கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். அன்ரனிப்பிள்ளை தெரிவித்தார்.

# ஆளுநர் வெற்றிக் கிண்ணம் உள்ளூராட்சி அணி வசம்





(நல்லூர்)

ஆளுநர் வெற்றிக் கிண்ண விளையாட்டுப் போட்டிகளில் ஒட்டுமொத்தமாக 50 புள்ளிகளைப் பெற்ற உள்ளூராட்சி அமைச்சு அணி முதலிடத்தைப் பிடித்து சம்பியன் பட்டத்தை தனதாக்கிக்கொண்டது.

மூன்றாவது ஆளுநர் வெற்றிக் கிண்ணத்திற்காக வடமாகாண அமைச்சு அணிகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் கடந்த ஒரு மாத காலமாக யாழ்ப்பாணத்தின் பல்வேறு மைதானங்களில் நடைபெற்று வந்தது.

மேற்படி போட்டிகளின் பரிசளிப்பு விழா நிகழ்வும், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகியவற்றின் இறுதிப் போட்டிகளும் நேற்று முன்தினம் புதன்கிழமை நல்லூர் ஸ்தான சி.த.க பாடசாலையில் நடைபெற்றது.

வலைப்பந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டியில் பிரதம செயலக கொத்தணி அணியும், கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் உள்ளூராட்சி அமைச்சு அணியும் சம்பியனாகின.

பரிசளிப்பு விழா நிகழ்வில், கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம், கால்பந்தாட்டம், சதுரங்கம், கரம், வலைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகள் முதலிடம் மற்றும் இரண்டாம் இடம்பெற்ற அணிகளுக்கான வெற்றிக் கிண்ணங்கள், மற்றும் பங்குபற்றி வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கான பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

ஆளுநர் வெற்றிக் கிண்ணத்திற்கான ஒட்டுமொத்தப் போட்டிகளிலும் 50 புள்ளிகளைப் பெற்று உள்ளூராட்சி அமைச்சு அணி அனைத்து போட்டிகளின் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு, ஆளுநர் வெற்றிக் கிண்ணத்தினைத் தட்டிச் சென்றது.

இரண்டாம் இடத்தினை 38 புள்ளிகளைப் பெற்ற கல்வி அமைச்சு அணியும், மூன்றாமிடத்தினை 37 புள்ளிகளைப் பெற்று பிரதம செயலக கொத்தணி அணியும் பெற்றுக் கொண்டன. இப்போட்டியின் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து வெற்றிக்கிண்ணங்களை வழங்கினார்.

அரச அதிகாரிகள், பணியாளர்கள், இரசிகர்கள் எனப் பெருமளவிலானோர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (80)

# நெஞ்சு பொறுக்குதில்லையே!

- சுகு ஸ்ரீதரன் -

வாழ்வா சாவா என்ற பிரச்சினை இருந்த போது பதுங்கி இருந்தவர்கள் மக்களின் பிரச்சினைகளில் சம்பிரதாயத்திற்கு கூட சம்பந்தப்படாதவர்கள் எல்லோரும் இன்று மக்களுடைய நியாயம் பேசுபவர்களாக வெளிக்கிட்டிருக்கிறார்கள்.

புலிகள் ஏற்படுத்திய பாசிச நிலைமைகளில் தமிழர்கள் சிக்கவைக்கப் பட்டிருக்கிறார்கள்.

இன்றைய நிலைமைகள், தலைமைகளுடன் ஒப்பிட்டால் நாம் கடந்தகாலத்தில் எதையெல்லாம் இழந்திருக்கிறோம் என்ற அதிர்ச்சி வெறுமை தான் மிஞ்சுகிறது.

இழக்கப்பட்டவற்றுக்கு நிகராக மக்கள் பெற்றது எதுவும் இல்லை. தீர்க்க தரிசனம் மிக்க தலைமைத்துவமும் இல்லை. களவாணிகள் தலைவர்களாகிக் கொண்டிருக்கிறார்கள்.

“பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்” என்பது போல் ஊடகங்களும் அப்படித்தான்.

தமிழில் இலங்கையில் ஊடகங்கள் அரிது. பிரச்சார சாதனங்கள் இருக்கின்றன.

உண்மையை அறிவதானால் இலங்கை ஊடகங்களைப் படித்து ஒரு வாய்பாட்டால்



ஜனநாயக விரோத நிலைமைகள் மிக நீண்டகாலத்திற்கு தமிழ் சூழலை நச்சுப்படுத்தியுள்ளது.

புலிகள் இயக்கத்திலிருந்து உயிரைக் கொடுத்தவர்கள், வாழ்வைத் தொலைத்தவர்களுக்கெல்லாம் இன்று எவ்வித சமூக மரியாதையும் கிடையாது.

ஏனைய இயக்கங்களிலிருந்த போராளிகளுக்கு நேர்ந்த அவலத்தைப் பற்றி கேட்கவே வேண்டாம். தமிழ் சமூகத்தின் ஆதிக்கவாதிகளின் மொழியில் அவர்கள் தீண்டத் தகாதவர்கள்.?? 26 ஆண்டுகள் வீதிகள் எல்லாம் மயானங்கள் ஆக்கப்பட்ட காலம். தற்போது தமிழ் கூறும் நல்லுலகின்(?) உள்ளூர் உலகப் பெருச்சாளிகளின் காலம்.

எல்லோருடைய உழைப்பபையும், தியாகத்தையும், அழிவையும் தமது சொந்த சௌகரியத்திற்கு மூலதனமாக்கியிருக்கிறார்கள்.

உலகின் அனேகமான சுதந்திரப்போராட்டங்களின் தலைவிதிகள் இப்படித்தான் முடிவடைந்திருக்கின்றன.

நெஞ்சு பொறுக்குதில்லையே!

1970களின் முற்பகுதியில் இருந்ததை விட மோசமான பிரிக்கவேண்டும்.

குறிப்பாக தமிழ் ஊடகங்கள் சமூக நல்லுறவிற்கான முயற்சிகளை எடுத்ததில்லை.

புலம்பெயர் ஆதிக்க சத்திகளின் விருப்பங்களை நிறைவேற்றும் எழுத்துக்களே ஆதிக்கம் பெறுகின்றன. இது தமிழ் கூறும் நல்லுலகின்(?) ஊடகங்களை பாரதூரமாகச் சேதப்படுத்தியுள்ளன.

புலம்பெயர் ஆதிக்க சக்திகளின் பொருளாதார தயவுகளுக்கான எழுத்துக்கள் அரசியல் என்பன புற்றீசல் போல் கிளம்பியுள்ளன.

அதற்கு இலங்கை வாழ் தமிழர்கள் பற்றி அவர்களின் துன்பமான வாழ்வு பற்றி நீலிக்கண்ணீர் அல்லது பாசாங்கான துயரம் மட்டுமே உண்டு.

புலிகளின் பணத்தைப் பங்குபோடுவதில் உயிர்ப்பலிகள் நிகழ்கின்றன. கனவுகளை விற்று பணம் பண்ணும் தொழில் நிகழுகிறது.


இந்த தொழில் ஐரோப்பா, வட அமெரிக்கா, இலங்கை, இந்தியா என ஒன்றை ஒன்று சார்ந்து இயங்கும் நிலையாக மாறியுள்ளது.

எதார்த்தமான தீர்வுகளை எட்டுவதற்கு இது தடையாகவே அமையும். உள்ளூர் தமிழர்களுக்கு எத்தகைய விமோசனமும் கிட்டாமல் செய்வதில் இவர்கள் கவனமாக இருக்கிறார்கள்.

புலிகளின் பிரதான பிரிவினர் அழிந்து விட்டனர். ஆனால் புலிகளைச் சொல்லி நிகழும் அரசியல் பெருச்சாளிகள் சார்ந்தது. இது பெரும் களவாணித் தொழில்.

உயிரை அர்ப்பணித்தவர்களின் உற்ற சுற்றத்திற்கோ பேரழிவைச் சந்தித்த சமூகத்திற்கோ இது எதுவித பிரயோசனமும் அற்றது.

தமிழுணர்வு, எழுச்சி விடுதலையின் பெயரால் நிகழும் வியாபாரம். மாபியா வியாபாரம்.



# அந்தப் பெ...
# பொறுப்...

ஆயுதங்களை தமது கைகளில் தூக்கியவர்கள் மற்றும் அதனை தூண்டிய அரசியல்வாதிகளின் கபடத் தனமான போலிவேடங்கள் எந்தளவுக்கு மக்களை வதைத்ததற்கு காரணகர்த்தா வாக இருந்ததோ அதே அளவுக்கு வடகிழக்கு பிரதேசங்களிலுள்ள மற்றும் ஓய்வு பெற்றுச்சென்ற தமிழ் அரச அதிகாரிகளினதும் பங்களிப்பும் இருந்திருக்கின்றது.

இவர்களது இந்த பொறுப்புணர்ச்சி யற்ற போக்கும் மாற்றான் கைப்பிள்ளை சிந்தனையும் அதற்கு வழிவிட்டு கொடுத்ததுடன் அதற்கு தமிழ் ஊடக அடிவருடிகள் தம்மால் முடிந்த யாவற்றையும் செய்து கொடுத்திருக்கின்றார்கள், செய்துகொண்டிருக்கின்றார்கள்.

இதற்குள்தான் இன்று கிளிநொச்சி பிரதேசத்திலிருந்து தமக்கு ஒளிமயமான எதிர்காலமொன்றை தேடி இலங்கை இராணுவத்தில் இணைந்து கொண்ட தமிழ் பெண்கள் விபச்சாரிகள் என்ற பட்டம் சூட்டப்பட்ட கதையும் அடங்கு கின்றது. இப்பெண்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வாதாரமற்று தொழில்தேடி அலையும்போது ஏறெடுத்து பார்த்திராத தமிழ் அரசியல்வாதிகளும், ஊடகங்களும் இணைந்து அவர்களை விபச்சாரத்தொழிலுக்காக சென்றிருக்கின்றார்கள் என்றபோது நிலைமைகளை நன்கு அறிந்திருந்த, அவற்றுக்கு தொழில்ரீதியாக தேவையான ஆவணங்களையும் சிபார்சுகளையும் வழங்கியிருந்த அதி-காரிகள் கண்மூடி குருடர்களாகவும், காதுகளை பொத்திக்கொண்டு செவிடர்களாகவும் இருக்கின்றார்கள்.

குறித்த பெண்களில் 15 பேர் தீவிர மன அழுத்தங்களுக்குள்ளாகி கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது, எவ்வித கருணைகாருணியமும் அற்று தமிழ்

வைத்தியசாலையிலிருந்து
அனுப்பி வைக்கப்பட்டுள்ள...
யாழ் வைத்திய அதிகாரி
ஒருவர் தெரிவித்தாராம்
என்று வேறு செய்திகளை
வெளியிட்டிருந்தார்கள்.

இச்செய்தியின்
உண்மைத்தன்மைதனை அறி...
கொள்வதற்காக இராணுவப்...
பேச்சாளர் பிரிகேடியர் நுவ...
வணிகசேகரவை கடந்த 14...
திகதி தொடர்பு கொண்டே...
இராணுவத்தில் இணைந்து
கொண்ட 15 யுவதிகள்
கிளிநொச்சி வைத்தியசாலை...
10ஆம் திகதி திங்கட்கிழமை...
அனுமதிக்கப்பட்டதையும் அ...
சிகிச்சை பெற்று மீண்டும்
13ஆம் திகதி வியாழக்கிழ...
பயிற்சித்தளம் தி...ப்பிய...
செய்த அவரிடம் நோயின்...
பற்றிக்கேட்டபோது அதற்கா...
கிளிநொச்சி வைத்தியசாலை...
பெற்றுக்கொள்ளவேண்டும்...

நோயின் தன்மை பற்றி...
வப் பேச்சாளரிடம் கேட்கச்...
மூக்குடைபட்ட வேதனையுட...
கிளிநொச்சி வைத்தியசாலை...
அத்தியட்சகர் கார்த்திக் அ...
தொடர்பினை ஏற்படுத்தி கு...
யுவதிகளின் நிலைமைகள் ...
வினவினேன்.

எங்களுக்கு தனிப்பட்ட ...
ளிகள் தொடர்பில் ஊடகங்க...
கருத்து தெரிவிப்பதற்கு அ...
கிடையாது எனவும் விபரங்க...
பெறவேண்டுமாயின் சுகாதா...
அமைச்சின் செயலாளரை ...
கொள்ளுங்கள் என்றார்.

இது தனிப்பட்... ஒரு ...
யின் விடயமல் அல்ல, இ...
தொடர்பில் பல்வேறு வகை...
ஊடகங்கள் பல்வேறு வகை...
செய்திகளை வெளிக்கொண...
நிலையில் நீங்கள் மௌனம்...
அவ்வாறான செய்திகளுக்கு...
முகமாக உதவுதாக அமைகி...
தகவல் அறியும் உரிமையை...
அழுத்தியபோது, குறித்த யு...
சிகிச்சை அளித்த வைத்திய...
ணரை தொடர்பு கொண்டா...

ஊடகங்களும் அரசியல்வாதி...
அவ்யுவதிகள் பாலியல்ரீதிய...
துஷ்பிரயோகம் செய்யப்ப...
யில் கிளிநொச்சி வைத்திய...
அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்...
அதற்கு தேவையான மருந்...
கிளிநொச்சி வைத்தியசாலை...
இல்லாத நிலையில் யாழ் ...

# நாம் கோபப்படும்போதெல்லாம் நம் எதிரி வெற்றி பெறுகிறான்

ஒருமுறை போர்க்களத்தில் முகமதுநபியின் மருமகன் அலி போரிட்டுக் கொண்டிருந்தார். அலி, உமர், ஹம்சா போன்றவர்களின் வீரம் இஸ்லாமிய வரலாற்றில் காவியத் தன்மை கொண்டது. அலி தன் எதிரியைக் கீழே தள்ளி, அவன் நெஞ்சின் மீது ஏறி அமர்ந்து வாளையும் உருவிவிட்டார்.

அடுத்த கணம் வித்தியாசமான, எதிர்பாராத சம்பவம் நடந்தது. ஒன்றல்ல, இரண்டு சம்பவம். என்ன நினைத்தானோ, கீழே கிடந்தவன் அலியின் முகத்தில் காறி உமிழ்ந்துவிட்டான். அவ்வளவுதான் அலியின் முகத்தில் ஒரு மாற்றம் தெரிந்தது. உடனே அவனைக் கொல்லாமல் எழுந்துவிட்டார்! அவனுக்கோ ஒரே ஆச்சரியம். எப்படியும் சாகத்தான் போகிறோம், எதிரியை அவமானப்படுத்திவிட்டுச் சாகலாம் என்று அவன் எடுத்த முடிவு இப்படி ஒரு விளைவை ஏற்படுத்தும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

அலி அவனை மன்னித்து “போ” என்றார். அவன் தப்பித்தோம், பிழைத்தோம் என்று போய்விடாமல் ஆச்சரியம் தாளாமல் அலியின் செயலுக்கு விளக்கம் கேட்டான். அலி சொன்னார்:

“இந்தப் போர் உனக்கும் எனக்கும் உள்ள தனிப்பட்ட பகையினால் நடக்கவில்லை. இது இறைவனுக்காக நடத்தும் தர்மயுத்தம். நீங்கள் தேவையில்லாமல் எங்களைத் தாக்க வந்ததனால் உருவான யுத்தம். இதில் திடீரென்று நீ என்னைக் காறி உமிழ்ந்துவிட்டதால் எனக்குக் கோபம் வந்துவிட்டது. இப்பொழுது நான் உன்னைக் கொன்றால் என் கோபத்தின் காரணமாகக் கொலை செய்ததாக ஆகிவிடும்” என்றாராம். அக்கணமே அவன் மனம் மாறி அவரோடு நட்புக்கரம் பிடித்தானாம்.




இது வரலாற்று நிகழ்ச்சி. இதன் மூலம் போர்க் காலத்திலேயே ஒரு மனிதன் தன் கோபத்தைக் கட்டுப்படுத்தி, தன்னை வெல்பவனே உண்மையான வீரன் என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். நமது எதிரியை எந்த விதத்திலும் ஜெயிக்கவிடக்கூடாது. அதுதான் முக்கியம். அதாவது நாம் கோபப்படும்போதெல்லாம் நம் எதிரி வெற்றி பெறுகிறான். இதை நினைவில் கொள்ளுங்கள்.

“கோபம் என்பது முட்டாள்தனத்தில் தொடங்கி வருத்தப்படுவதில் முடிகிறது” என்று பிதாகொரஸ் தெரியாமலா சொன்னார்?

(‘இந்த வினாடி’ என்ற புத்தகத்தில் நாகூர் ரூமி...

பல்வாதிகளும்
பல்ரீதியாக
ப்யப்பட்ட நிலை
வைத்தியசாலையில்
ளார்கள் என்றும்
மருந்துவகைகள்
யசாலையில்
யாழ் போதனா

கொள்ளலாம் எனக்கூறிய அவர் டாக்டர் சிவதாஸின் தொடர்பு இலக்கத்தை தந்து கழுவிய மீனில் நழுவிய மீனானார்.

மனோவியல் நிபுணரான டாக்டர் சிவதாஸ் அவர்கட்கு தொடர்பினை ஏற்படுத்தி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த பெண்கள் எவ்வாறான நோய்க்கு

அதாவது இலங்கையிலே நிரந்தர வருமானமற்ற பெண்ணொருவருக்கு இன்று வாழ்கைத்துணை என்பது எட்டாக்கனியாகவே உள்ளதான நிலையில் தொழிலொன்றை தேடி அதனூடாக சிறந்த வாழ்க்கை, திருமண பந்தம் என்ற எதிர்பார்ப்புக்களுடன் இராணுவத்தில் இணைந்த அவர்களை ஓரிரு மாத

# பெண்களின் வாழ்வைப் பாழாக்கியதற்கான பொறுப்பை சிறிதரன் எம்.பி ஏற்கவேண்டும்!



- பீமன் கட்டுரையிலிருந்து.

ருந்து
டுள்ளதாக
காரி
ம்
களை
ர்.
ன அறிந்து
ணுவப்
ர் நுவன்
ந்த 14ம்
ண்டேன்.
ணந்து
ள்
சாலையில்
கிழமை
யும் அவர்கள்
டும்
க்கிழமை
யியலையும் உறுதி
யின் தன்மை
தற்கான பதிலினை
சாலையில்
ண்டும் என்றார்.
பற்றி இராணு-
கட்கச் சென்று
னையுடன்
சாலையின்
அவர்களுக்கு
தி குறித்த
கள் குறித்து
பட்ட நோயா-
டகங்களுக்கு
த் அதிகாரம்
பிரங்களை
சுகாதார
ரை தொடர்பு
ர்.
ரு பாளி
, இவ்விடயம்
வகையான
வகையான
கொண்டுவந்துள்ள
ளனம் காப்பது
ளுக்கு மறை
மைகின்றது என
மையை சற்று
ந்த யுவதிகளுக்கு
த்திய நிபு-
ணரால் அறிந்து

காலங்களுள் பாலியல் தொழிலாளிகள் என வர்ணித்ததன் ஊடாக அவர்களது வாழ்கை கேள்விக்குறியாகிவிட்டது என ஏற்பட்ட உள்மன முரண்பாடுகளினூடாகவே இந்த நோய் இவர்களை பாதித்திருக்கவேண்டும் என வைத்தியரின் விளக்கத்தினூடாக வரமுடிகின்றது.

உள்ளாகியுள்ளார்கள் என்ற தகவலை அறிய முற்பட்டபோது இங்கு குற்றஞ்சுமத்தப்படுகின்ற அனைத்து அதிகாரிகளிடத்துமிருந்து வேறுபட்டவராக காணப்பட்டார்.

நிலைமை தொடர்பில் முழுமையான விபரத்தினை தரமுடியும். ஆனால் வவுனியாவிலிருந்து கொழும்பிற்கு பஸ்வண்டியில் பயணம் செய்து கொண்டிருக்கின்றேன். பின்னணியில் சத்தமாக உள்ளது. உங்களுக்கு இடைஞ்சல் இல்லையாயின் என்னால் கூறமுடியும் என்றதுடன் தொடர்ந்து நிலைமைகளை விளக்கினார். அதன் இணைப்பு இங்கே உள்ளது. http://www.youtube.com/watch?feature=player_embedded&v=V6jq25MtLHE

குறித்த பெண்கள் எவ்விதமான பாலியில் துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாகவில்லை என்பதை உறுதிப்படுத்திய அவர் அப்பெண்கள் தாங்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளோம் எனத் தங்கள் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள களங்கத்தை நீக்குங்கள் என வைத்தியரிடம் கேட்டதாகவும் கூறினார். மேலும் மேல் மனம், ஆழ் மனம் என்கின்ற இரு மனங்களுக்குமிடையே ஏற்பட்ட உள்முரண்பாடு காரணமாகவே இவர்கள் மன உளைச்சல் நோய்க்கு ஆளாகியிருக்கின்றார்கள் என்றார்.

எனவே இவர்கள் இந்நோய்க்கு ஆளானமைக்கான முழுப்பொறுப்பையும் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சிறிதரன் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவர்கள் இந்நோயினால் நிரந்தரமாக பாதிக்கப்படுவார்களாயின் அவர்களது வாழ்நாள் முழுவதுக்குமான பராபரிப்பு செலவிலிருந்து உரிய நஷ்டஈட்டினையும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சிறிதரன் செலுத்தவேண்டும்.

மேலும் சிறிதரன் போன்றோரது விஷமத்தனங்களை முறியடிப்பதற்கு கடந்தகால அதிகாரிகளைப் போல் அல்லாது துணிவுடன் செயற்பட்ட டாக்டர் சிவதாஸ் போன்று சகல அதிகாரிகளும் உண்மைகளை மக்களுக்கு தெளிவுபடுத்த முன்வரும் போது, ஊடகங்களின் விஷமப் பிரச்சாரங்களும் முறியடிக்கப்படும்.

இதற்கு ஏதுவாக இலங்கை அரசும் உடனடி நடைமுறை ஒன்றை கொண்டுவரவேண்டும். அதாவது வடகிழக்கில் உள்ள சகல அரச நிறுவனங்களிலும் மாவட்ட, பிரதேச மட்டங்களில் ஊடக பேச்சாளர்களை நியமிக்கவேண்டும். அப்போது உத்தியோகபூர்வமான உண்மைச் செய்திகள் மக்களைச் சென்றடையும். அரசியல்வாதிகளினதும் ஊடகங்களினது பொய்பிரச்சாரங்கள் வெறுமனே காற்றில் பறக்கும்.

# பொம்மை பைத்தியம்!

"ஹெல்லோர் கிட்டி" என்ற, கற்பனை பெண் பூனை கதாபாத்திரம், உலகம் முழுவதும் உள்ள, குழந்தைகளிடையே, மிகவும் பிரசித்தம். இந்த கற்பனை கதாபாத்திரம், கார்ட்டூன்களிலும், "டிவி" சீரியல்களிலும், ஒளிபரப்பாகி வருகிறது.

குழந்தைகளுக்கான பொம்மை கடைகளிலும், இந்த "ஹெல்லோ கிட்டி" பொம்மை விற்பனை சக்கை போடு போடுகிறது. குழந்தைகளுக்கு வேண்டுமானால், இந்த பொம்மைகள் மீது, ஆர்வம் இருக்கலாம். ஆனால், ஜப்பானை சேர்ந்த, அசாகோ கண்டா என்ற, 39 வயது பெண், "ஹெல்லோ கிட்டி" மீது, பைத்தியமாகவே ஆகிவிட்டார்.

இந்த பொம்மைகள், கண்ணில் எங்கு தென்பட்டாலும், உடனடியாக அதை விலைக்கு வாங்கி விடுவார். இதுவரை, 4,519 பொம்மைகளை வாங்கி, தன் வீட்டில், அடுக்கி வைத்துள்ளார். இதன் மூலம், கின்னஸ் சாதனை புத்தகத்திலும், இவரது பெயர் இடம் பெற்று விட்டது.

"என்னுடைய இந்த விசித்திரமான பழக்கத்தால், என் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவது உண்மை தான். ஆனால், சிறு வயதில் தொடங்கிய ஆசையை, என்னால் விட முடியவில்லை...." என்கிறார், அசாகோ கண்டா.



தம்.
னைக்
டது.
க்
தாக
ணமே
தன்
னே
கியம்.
லாம்
னார்?
ரூமி)

"டிவிங்க்ள் ட்விங்க்ள் லிட்டில் ஸ்டார்
ஹவ் ஐ வொண்டர் வாட் யு ஆர்"
பாடலுக்கு மெட்டு போட்டபோது மொஸார்ட் ஐந்து வயது சிறுவன்.

"சாரே ஜஹான் சே அச்சா" பாட்டுக்கு மெட்டு போட்ட சிதார் மேதை ரவிசங்கர் 12-12-12 அன்று ரஜினி பிறந்த நாளில் 92 வயதில் இறந்திருக்கிறார்.

யார் இறந்தாலும் அவர் சம்பந்தப்பட்ட விஷயங்கள் நினைவிற்கு வருகிறது. இருபது வருடங்களுக்கு மேலாக "அல்லா ராக்கா தபலாவுடன் அந்த சிதார் என் காதுகளுக்கு புகட்டிய தேசி, சுத்த சரங், யேமன் சரங்"

அவருடைய மாமனாரும் குருவுமான அலாவுதீன் கான், அண்ணா நடன மேதை உதய் சங்கர், மைத்துனர் சரோட் அலி அக்பர் கான், மகள்கள் நோரா ஜோன்ஸ், அனுஷ்கா.. Illustrious relatives! ரவிசங்கர் காதல் மன்னன்!

92 வயதில் நிறைந்த வாழ்வு என்று தான் சொல்லவேண்டும். 32 வயதில் மறைவது? என்.சி.வசந்தகோகிலம் குறைவாழ்வில் இறந்து போனவர்.

"நேத்திரங்கெட்டவன் காலன் - தன் முன்
நேர்ந்ததனைத்தும் துடைத்து முடிப்பான்" - பாரதி

கேரளாவில் பிறந்து நாகப்பட்டினத்தில் தான் வளர்ந்திருக்கிறார்.

Ifs and buts போட்டு வாழ்க்கையை விசாரிப்பது உலக இயல்பு எனில் வசந்தகோகிலம் நிறை வாழ்வு வாழ்ந்திருந்தால் எம்.எஸ்.சுப்புலட்சுமியின் இசை அந்தஸ்து ஒப்பீடு செய்யும்படி ஆகியிருக்குமோ.

எப்போது கேட்டாலும் ஏதோ நேற்று ஒலிப்பதிவு செய்த பாடல்களோ என்ற பிரமை வசந்தகோகிலம் பாடல்களில் ஏற்படுகிறது. ஏன் பள்ளி கொண்டீரய்யா என்று அந்த குரல் கேட்கும்போது "இன்று இங்கு ஒரு இருபது வயது பெண் பாடுவது போல" இருக்கிறது.

சங்கராபரண ராக "மஹாலக்ஷ்மி ஜெகன் மாதா"
சண்முகப்ரியா "தந்தை தாய் இருந்தால் உலகத்தில்"
காம்போதி "ஆனந்த நடனம்"
வசந்தபைரவி ராக "நீ தயராதா"
முகாரியில் அழும் "ஏலாவதாரமு"
"ஜீவன் உள்ள குரல்" என்று ஒரு cliche உண்டு தான்!

திருமண வாழ்வு என்பது தேவதைகளுக்கு எப்போதும் பெருந்தோல்வி தானே. ஆனால் வசந்தகோகிலத்தின் முன்னாள் கணவனின் ஊருக்கு பின்னர் போக நேர்ந்த போது அந்த இரவு தோற்றுப்போன தாம்பத்தியத்தை நினைத்து மிகவும் சஞ்சலப்பட்டு தேம்பினாராம். எம்.எஸ்.க்கு ஒரு சதாசிவம்

- R.P. ராஜநாயஹம் -

# என்.சி.வசந்தகோகிலம்



போல வசந்த கோகிலம் வாழ்விலும் ஒரு சதாசிவம் உண்டு. சி.கே.சச்சி என்ற சதாசிவம். எம்.ஜி.ஆர் அறிமுகமான சதிலீலாவதி படத்தில் எல்லிஸ்.ஆர் டங்கனுக்கு அசோசியேட் டைரக்டர். இந்த சச்சியோடு தான் வசந்தகோகிலம் பின்னர் வாழ்ந்திருக்கிறார். 1940இல் "சந்திரகுப்த சாணக்யா" படத்தில் வசந்தகோகிலம் நடித்த போது மேக் அப் சாமான்கள் லண்டனிலிருந்து சச்சி தருவித்தாராம்.

"வேணுகானம்" படத்தில் வி.வி.சடகோபனுடன் வசந்தகோகிலம்.

சி.கே.சச்சி இயக்கிய "கங்காவதார்"(1942) படத்தில் கங்கையாக வசந்தகோகிலம்.

பாகவதரின் மனைவியாக "ஹரிதாஸ்" படத்தில் வசந்தகோகிலம்.

"ஆஹாஹா என்ன பாட்டு அந்தம்மா வசந்தகோகிலம் சோகமா பாடுற பாட்டு" என்று அஷ்டாவதானி பி.பானுமதி மெய்மறந்திருக்கிறார்.



வால்மீகியில் டி.ஆர் ராஜகுமாரி, யு.ஆர்.ஜீவரத்தினத்துடன் வசந்தகோகிலமும் நடித்தார். இந்தப்படம் ஹரிதாஸ் வெற்றிக்கு பின் அதன் இயக்குனர் சுந்தர் ராவ் நட்கர்னியால் உற்சாகமாக தியாகராஜ பாகவதர் மீண்டும் நடிக்க ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் பாகவதர் கைதாகியதால் ஹொன்னப்ப பாகவதர் நடித்தார். டி.எஸ்.பாலையா கூட வால்மீகியில் உண்டு.

எம்.எஸ்.க்கு ரொம்ப களையான அழகு முகம். மீரா, சகுந்தலை படங்களில் பார்க்கலாம். ஆனால் வசந்தகோகிலம் முகம் பற்றி அப்படி சொல்லமுடியாது. பெண்மையின் நளினம் கூட நடிப்பில் குறைவு என்பது ஹரிதாஸில் தெரிகிறது. ஆனாலுமே வசந்தகோகிலம் ரொம்ப அழகு என்று தான் சொல்வார்கள்.

எலும்புருக்கி நோய் படுத்திய பாட்டில் வசந்தகோகிலம் 1951ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் திகதி கமலஹாசன் பிறந்த திகதியில் தான் இறந்திருக்கிறார். ஆனால் அப்போது கமலஹாசன் பிறந்திருக்கவில்லை! அதற்கு சரியாக மூன்று வருடம் கழித்து தான் பிறந்தார்.




# கலைச்சிறப்புமிக்க பருத்தித்துறை

'பருத்துறை' என மக்கள் பேச்சில் வழங்கி வரும் இடம் 'பொன்னாத்தை' கந்தசாமி வள்ளிப்பிள்ளையின் ஊராகும். பருத்துறை என வழங்கும் இப்பெயருக்கு எழுத்து வழக்குப் பெயர் பருத்தித்துறையாகும். பருத்தித்துறை என்ற பெயர் 16ஆம் நூற்றாண்டில் இருந்து வழங்கி வந்த பெயர் என்பதற்குப் போர்த்துக்கேய, டச்சு ஆவணங்கள் தக்க சான்றுகளை வழங்கும். இதற்குப் பல்கலைக்கழக முதுமாணிப்பட்ட ஆய்வுகளுக்கு 'அடி குறிப்பு' இட்டுக் காட்டுவது போல அடிக்குறிப்பு தேவையில்லை. பருததுறை, பருத்தித்துறை என்று கூறப்படும் பெயர்கள் எவ்வாறு ஏற்பட்டன. என்பது முக்கியம் எல்லாவகையான பெயர்களுக்கும் பொருள்உண்டு. அந்தப் பொருள் என்ன என்பதில் இப்பொழுது மயக்கம் ஏற்பட்டுள்ளது என்பது தான் உண்மை. ஆய்வறிஞர்கள் இப்போது நல்லாய் போட்டுக் குழப்புகிறார்கள். பருதிமுனை, பாறை துருத்திமுனை என்பன பருத்தித்துறையாக மாறியிருக்கலாமா என்ற ஐயங்களும் உண்டு.

இலங்கையின் வடபகுதியில் அமைந்த யாழ்ப்பாணக் குடாநாட்டின் யாழ்ப்பாண நகரில் இருந்து ஏறத்தாழ 30 கிலோ மீற்றர் தூரத்தில் வடகிழக்காக வடமராட்சிப் பிரதேசம் அமைந்துள்ளது. வடமராட்சியின் பின் உச்சந்தலைப் பகுதியில் பருத்தித்துறை அமைந்துள்ளது. பாக்கு நீரினை: வங்காள விரிகுடா ஆகியவற்றை முறையே வடக்காகவும் கிழக்காகவும் கொண்ட மூலை நகரமாகக் காணப்படுகின்றது. இலங்கையின்வடமுனையான பனைமுனை பருத்தித்துறை நகரத்திற்கு கிழக்காக ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குள் அமைந்துள்ளது. இப்பகுதியில் ஏறத்தாழ 2000 குடும்பங்கள் வரை காணப்படுகிறது. யாழ். குடா நாட்டுக்குப் பொதுத் தன்மையான சுண்ணாம்புக்கற்பாறைப் பிரதேசமாக இப்பகுதி அமைந்துள்ளது.


பருத்தித்துறைப் பிரதேசத்தின் பெருமளவு மக்களின் நன்னீர்த் தேவையை சிவன் கோவிலை அண்டிய பகுதிக்கிணறுகள் இன்று ப,ர்த்தி செய்கின்றன.


இலங்கையில் இயக்கர், நாகர் என இரண்டு வகைப்பட்ட இனத்தினர் வாழ்ந்துள்ளதை பழையவரலாறுகள் கூறுகின்றன. நாகர் சமூகத்தினரே தமிழர்களாக மாற்றம் பெற்றதாக அறிய முடிகின்றது இவ்வாறான ஆதித் தமிழ் குடியினர் பருத்தித்துறையிலும் மிகக் குறைந்த எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தனர்.

இந்த ஆதிக்குடியினருடன் தென்னிந்தியாவில் இருந்து காலத்திற்கு காலம் இங்கு வந்த மக்கள் கூட்டத்தினரும் தமிழர் மட்டுமன்ற மலையாளிகள், முஸ்லிம்கள் என்போரும் தென்னிலங்கைச் சிங்களவர்களும் தென்னிலங்கை முஸ்லிம்களும் இங்கு துறைமுக வணிகத்துடன் தொடர்பானதும் பருத்திப் பஞ்சு, பருத்தி நூல் , பருத்திப்புடவை, மற்றும் பல்வேறு பொருட்களை கொள்வனவு செய்யவும் தும்புத் தொழில் பொருட்கள் பனம் பண்டங்கள் என்பவற்றின் வணிகத் தேவைகளுக்காகவும் இவர்கள் வந்து குடியேறினர். ஆயினும் வடமராட்சி கிழக்கு மக்களின் வருகையுடனேயே பருத்தித்துறை தனக்கே உரிய பண்பாட்டினைப் பெற்றது.



Y.M.C.A மண்டபமும், மெதடிஸ்த தேவாலயமும்


சிவன் கோவில்


பாதையோர அப்பக்கடை

தெருமூடி மடம்



வலையில் இருந்து மீன் எடுக்கும் மீனவர்கள்




மீன் சந்தை

# தமிழ் கல்விச் செயற்பாடுகளை குழப்பும் நடவடிக்கையை அனுமதியோம்

## தமிழர் ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களின் விருப்பத்திற்கு மாறாக இடமாற்றம் செய்வது ஆசிரிய சங்கத்தின் வேலையல்ல என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இச்சங்கம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் எந்தப் பாகத்திலும் இல்லாத அளவிற்கு வடமாகாணத்தில் இடமாற்றங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றதால் அவை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் தொடர் குழப்பங்களை ஏற்படுத்துகின்றன.

அதேவேளை, இடமாற்றங்களை இரத்துச் செய்கின்றார்கள், முறைகேடுகள் என்கின்றார்கள், தென்பகுதியில் இடமாற்றத்தினை செய்யமுடியாதவர்கள் தேசிய இடமாற்றக் கொள்கைகளுக்கு முரணாக வடமாகாணததில் இடமாற்றங்களை திணிப்பது ஏனென்று பலருக்கு புரிந்திருந்தாலும், சிலருக்கு புரியாமல் இருப்பது வேதனை அளிக்கின்றது.

தேசிய இடமாற்றக் கொள்கையானது அமைச்சரவை அங்கீகாரத்துடன் வெளியிடப்படும் சுற்றுநிருபம். அதனை உதாசீனம் செய்து ஆசிரியர்களின் விருப்பத்திற்கு மாறாக, கால அவகாசமில்லாமல் இடமாற்றங்கள் செய்வது எவ்வளவு பாரதூரமானது என்பதனை புரிந்து கொளளாமல் இருப்பது துரதிர்ஷ்டமானது

அதிபர் ஆசிரியர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளை நீக்கி அவர்களின் சுயமான கற்பித்தலுக்கு உதவுவது ஆசிரிய தொழிற்சங்கத்தின் கடமையாகும். அதனை நிராகரிப்பது, இடமாற்றக் கொள்கைக்கு மாறாக, வலுக்கட்டாயமாக தகுதியில்லாத, வயது முதிர்ந்த, குழந்தைகளையுடைய ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது ஆசிரிய தொழிற்சங்கத்தின் வேலையல்ல. ஒரு ஆசிரிய தொழிற்சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஆசிரியரை இன்னொரு தொழிற்சங்கம் பழிவாங்குவதை பொறுக்க முடியாது.

ஏழுவருட ஆசிரிய இடமாற்றம் கூட தேசிய இடமாற்ற சுற்றுநிருபத்தில் இடம்பெறாத ஒன்று. அதேவேளை, தமிழ் பிரதேசங்களின் கல்வியை பாதாளத்தில் தள்ளிவிடவேண்டுமென்பதற்காக திட்டமிட்டுச் செய்யப்படும் நாசகாரச் செயலை இனிமேலும் பார்ததுக் கொண்டிருக்க முடியாதென்றும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மதுபானசாலையை அகற்றக்கோரி மன்னாரில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(மன்னார்)

மன்னார் சௌத்பார் பிரதான வீதியில் அமைந்துள்ள இரண்டு மதுபானசாலைகள் மற்றும் கள்ளு விற்பனை நிலையம் என்பவற்றை உடன் அகற்றுமாறு கோரி மன்னார் பனங்கட்டுக்கொட்டு மீனவர் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

மன்னார் பனங்கட்டிக்கொட்டு பிரதான வீதியில் ஒன்று கூடிய நூற்றுக்கணக்கான மக்கள் பதாதைகளை ஏந்தியவாறு குறித்த மதுபானசாலைகளை அகற்றக் கோரி கோசங்களை எழுப்பியவாறு சௌத்பார் பிரதான வீதியூடாகச் சென்றனர்.

இந்நிலையில் மன்னார் நகர சபையின் அனுமதியின்றி மன்னார் சௌத்பார் பிரதான வீதியில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டு புதிய மதுபானசாலை திறக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அதனை மூடுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள பொலிஸாருக்கு மன்னார் நகர சபை கடிதம் ஒன்றை உடன் அனுப்பி வைத்துள்ளது.



புதிதாக அமைக்கப்பட்ட குறித்த மதுபானசாலை சகல தரப்பினருடைய அனுமதிகளை பெற்றுள்ள போதும் மன்னார் நகர சபையிடம் அனுமதி பெறவில்லை என மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக மதுவரித் திணைக்களத்திடம் பேசிய போது, இம்மாதம் 31 ஆம் திகதி வரை மட்டுமே குறித்த இரண்டு மதுபான விற்பனை நிலையங்களிலும் போத்தல் கள்ளு விற்பனை நிலையத்திலும் அவை விற்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 1 ஆம் திகதி முதல் அவ்விடத்தில் மதுபானப் பொருட்கள் விற்பதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படாது எனவும் உறுதியளிக்கப்பட்டது.

# நந்தாறாம தமிழ் பௌத்த பாடசாலைக்கு ஆளுநரால் கணனித் தொகுதி அன்பளிப்பு



(சிகரம்)

யாழ். உடுவில் நந்தாறாம தமிழ் பௌத்த அறநெறி பாடசாலைக்கு வடமாகாண ஆளுநர் செயலகத்தால் ஒரு கணனி மற்றும் பிறிண்ட் மிசின் என்பன வழங்கப்பட்டுள்ளது.

ஆளுனர் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் நந்தாறாம தமிழ்பௌத்த சங்க மாணவர், ஆசிரியர் நிர்வாகத்தினருக்கு இடையில் நடைபெற்ற விசேட சந்திப்பின் போதே இவை வழங்கப்பட்டுள்ளன.

உடுவிலில் 52 மாணவர்களைக் கொண்டு இயங்கும் நந்தாறாம தமிழ் பௌத்த அறநெறி பாடசாலை மாணவர்கள் தமது கணனி கல்வி நெறியை தொடர்வதற்கு கணனி வேண்டும் எனக் கோரியிருந்தனர் இதற்கு அமைய ஆளுநரால் இவை வழங்கப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்பின் போது மாணவர்களால் தமக்கு தற்போது விடுமுறை காலம் என்பதால் ஒரு கல்விச் சுற்றுலா செல்வதற்கு ஏற்பாடுசெய்து தருமாறு ஆளுநரை கேட்டுள்ளனர். இதனை உடனடியாக கவனத்தில் எடுத்த ஆளுநர் எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் அனுராதபுரத்திற்கு சென்றுவருமாறு தெரிவித்ததுடன் அதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளையும் செய்து தருவதாக தெரிவித்துள்ளார்.

மேலும் பாடசாலைக்கு தேவைப்படும் பொருட்கள் தொடர்பான விபரங்களை தருமாறும் தன்னால் முடிந்த அளவு பெற்றுத்தருவதாக குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர், தமிழ் பௌத்த சங்க நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் நந்தாறாம தமிழ் பௌத்த சங்க நிர்வாகத்தினர் என பலர் கலந்து கொண்டனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு படைப்பாளி தனது அக்கறை சார்ந்த தளத்திற்கும் அனுபவம் சார்ந்த தளத்திற்கும் உள்ள வேறுபாடுகளை எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியவனாகிறான். அக்கறைகள் விரிவான எல்லைகளைக் கொண்டிருப்பவை. நமது சார்பு நிலைகளுக்கு ஏற்ப நாம் சேகரித்துக் கொள்ளக் கூடியவை. திட்டவட்டமானவை. ஆனால் அனுபவங்களோ குறுகலானதும் தற்செயலானதும் ஒருவரது அந்தரங்கங்களைத் தொடுவதுமாகும். அது படைப்பாளியின் காலத்தாலும் இடத்தாலும் கட்டுண்டு கிடப்பது. அனுபவமே படைப்பு நிலைக்கான முதல் வெளிச்சத்தைக் கொடுக்கிறது. மூன்றாம் உலகின் தமிழ்க் குரலாக அரசியல் மேடைகளிலும் ஐ.நா. சபையிலும் விவாதிக்கக்கூடிய வழிவில் பிரச்சினைகளைக் கவிதைக்குள் விவாதிக்க முடியாது. ஒருவன் தனது அன்றாட வாழ்வில் யாராக இருக்கிறான், சமூகமும் வரலாறும் அவனை எந்தவிதமாகத் திரித்து விட்டிருக்கின்றன, எத்தகைய நிகழ்வுகளால் அவனது இருப்பு குலைகிறது, மனசாட்சி என்னவிதமான நெருக்கடிகளுக்கு ஆளாகிறது என்பதன் வழியாகத்தான் நமது அசலான தமிழ்க் குரலைப் பதிவு செய்ய இயலும்.

**– மனுஷ்ய புத்திரன்**

ஒரு வரலாற்று நிகழ்வுக்கு மூன்று விதமான வரலாறுகள் வெவ்வேறு பார்வைக் கோணம் கொண்ட மூன்று தரப்புகளால் கட்டமைக்கப்படுகின்றன என வைத்துக்கொள்வோம். ஓர் இலக்கியவாதிக்கு இந்த மூன்று வரலாற்றுக் கோணங்களுமே முக்கியமானவை. இந்த வரலாறுகளின் அடிப்படையில் இலக்கியவாதியால் இன்னொரு வரலாறைக் கட்டமைக்க முடியும். அது நான்காவது வரலாற்றுக் கோணம். இலக்கியவாதியின் தரப்பு அது. எழுதப்பட்ட அல்லது சொல்லப்பட்ட வரலாற்றை அப்படியே பிரதியெடுப்பதல்ல இலக்கியம். வரலாற்றின் நுண் அலகுகளிற்குள் ஊடுருவி வரலாற்றை மறு ஆக்கம் செய்வதே படைப்பிலக்கியம். இலக்கியத்தை உபவரலாறு என்பார்கள்.

**– ஷோபா சக்தி**

ஒரு இலக்கியம், இலக்கியமாக இருக்கிறது என்ற காரணத்துக்காக மட்டுமே காலம் காலமாக நிலைத்திருப்பதில்லை. ஒரு கலாசாரத்தை அடையாளப்படுத்துகிற, அனைவரையும் உள்ளடக்கிக்கொண்ட சில கூறுகள் அதில் இருப்பதால்தான் அது நிலைத்திருக்கிறது.

**– சிந்தியா ஃப்ரீலேண்ட்**

என்னைப் பொறுத்தவரை உயர் கலைத்தன்மை அல்லது உயர் கலைரசனை என்பது வாழ்க்கையின் உண்மையான தோற்றத்தை – அதன் இயக்கத்தை கலைப்படைப்புகள் மூலம் விளங்கிக்கொள்வதற்குரிய ஆர்வத்தையே குறிக்கும். மட்டமான ரசனை என்பது வாழ்க்கையில் இருந்து தப்பிச் செல்வதற்கான கலைமுயற்சியைக் குறிக்கும். அந்தவகையில் உயர் கலைரசனைக்கும் மட்டமான ரசனைக்கும் இடையே ஒரு நீண்ட இடைவெளி இருப்பதை நாம் அவதானிக்கவே செய்கிறோம்.


**– எம்.ஏ.நுஃமான்**

புறத்தகவல்கள் நிரம்பிய கதைகளாக இருப்பதால் தற்காலச் சமூகமும் சூழ்நிலையும் என் கதைகளில் நிறையவே இருக்கின்றன. தனிமனித மனப்போக்கின் விபரீதங்களுடன், சமூக சமுதாய அமைப்புக்கள் மனிதன் மீது செலுத்தும் பாதிப்பும் ஆளுமையும் நிறையவே பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றன. கூடுமானவரை·நடுநிலை பிறழாமல் இவை சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் பல, புயல்களையும் புரட்சிகளையும் உருவாக்கக் கூடியவை. ஆனால் என்னை ஒரு புரட்சியாளனாக நான் கற்பித்துக்கொள்ள முடியவில்லை. ஒரு ஜனசமூகத்தை அல்லது கூட்டத்தை அழைத்துச் செல்லும் தகுதி நான் பெற்றிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இதை நான் அடக்கம் காரணமாகச் சொல்கிறேன் என்றில்லை. உண்மைநிலையே அதுதான். நான் உலகத்தை விமர்சித்து எழுதினாலும், தனிமையில்தான் எழுதப் பயிற்சி மேற்கொண்டவன். எந்த அளவுக்கு நான் பிறர் தலைவிதியை நிர்ணயிக்க முற்படலாம் என்பது பற்றி எனக்குச் சந்தேகம் இருக்கிறது. ஒருவன், ஒரு காரியத்தை ஒழுங்காகச் செய்தால் போதாதா? தன் பலங்களை உணர்வதைக் காட்டிலும், தன் குறைபாடுகளை ஒருவன் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று நினைப்பவன் நான். புதிதாக எழுதத் தொடங்குபவர்களுக்கும் நான் இதைத்தான் ஒரே அறிவுரையாகக் கூறமுடியும்.

**– அசோகமித்திரன்**

# சர்வதேசத்தை அதிருப்திப்படுத்தும் நீதித்துறை மீதான அழுத்தங்கள்

## கரு.எம்.பி.கவலை



(கொழும்பு)


நீதிமன்றின் மீது பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்கள் தொடர்பில் சர்வதேச அமைப்புக்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் மீது அடக்கு முறைகள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகவும், இது தொடர்பில் சர்வதேச நிறுவனங்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு மேலதிகமாக, நீதிமன்றின் மீதான அழுத்தங்கள் தொடர்பிலும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் நியாயமான முறையில் பயன்படுத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். கண்ணீர்ப் புகைக் குண்டு, குண்டாந்தடிகளின் மூலம் பொதுமக்களின் கருத்துக்களை நசுக்கிவிட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மோட்டார் கார்பந்தயப் போட்டி பொதுமக்கள் பணத்தை விரயமாக்கும் ஓர் நிகழ்வாகவே கருதப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.



மறவன்புலோ கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் யுத்த காலத்தின் போதும் அதற்கு முன்னரும் சேதமடைந்த, இன்று வரை புனரமைக்கப்படாத நிலையில் பல கிணறுகள் காணப்படுகின்றன.

மணற்காட்டு - கோவிலாக்கண்டி வீதியில் மட்டும் ஐந்திற்கும் மேற்பட்ட கிணறுகள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. பாடசாலை மாணவர்களின் பயணப் பாதையில் சிறுவர்களின் உயிர்களைக் காவுகொள்ளக் காத்திருப்பன போல இக்கிணறுகள் உள்ளன. எனவே இந்த பாதுகாப்பற்ற கிணறுகளைப் புனரமைப்பது எப்போது?

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் வெளியிடப்படும்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விபரங்களை அம்பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கபே என்னும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விபரங்களை அறிந்து கொள்ளும் உரிமை நாட்டு மக்களுக்கு காணப்படுவதாகவும அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசாங்க உயர் மட்டத்தில் இலஞ்ச, ஊழல் மோசடிகள்

## அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் உயர் மட்டத்தில் இலஞ்ச, ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருவதாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பொதுத்துறை ஊழியர்கள் மீது இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட போதிலும், உயர் மட்டத்தினர் பாரியளவில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

சில தரப்பினர் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்திய போதிலும் உயர்மட்ட அரசாங்கத் தரப்பினர் பாரியளவில் மோசடிகளில் ஈடுபட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கைதிகள் நலன்புரி பேரவையின் 95ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மிக நேர்மையாக கடமைகளை ஆற்றி வரும் தரப்பினர் மீதும் இலஞ்ச, ஊழல் முத்திரை குத்தப்படுவது வருத்தமளிப்பதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

புளத்சிங்கள பிரதேசத்தில பத்து ஏக்கரில் பெண்களுக்காக தனியான சிறைச்சாலையொன்று அமைக்கப்பட உள்ளதாகவும அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய இராணுவத் தளபதியை சந்தித்தார் இலங்கைத் தளபதி

(கொழும்பு)



இந்திய இராணுவ அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் பிக்ரம் சிங் தலைமையிலான சிரேஷ்ட இந்திய இராணுவ அதிகாரிகள் அடங்கிய தூதுக் குழு, ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இலங்கை வந்தடைந்தது.

இந்நிலையில், இந்திய இராணுவத் தளபதிக்கும் இலங்கை இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் ஜகத்ஜய சூரியவுக்கும் இடையில் நேற்று முன்தினம் மாலை சந்திப்பு இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள இராணுவத தலைமையத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதுடன் இருவருக்கிடையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

அத்துடன், இராணுவத் தலைமையகத்துக்கு விஜயம் செய்த ஜெனரல் பிக்ரம் சிங், இலங்கை இராணுவ வீரர்களால் வழங்கப்பட்ட அணிவகுப்பு மரியாதையினையும் ஏற்றுக் கொண்டார்.

நீண்ட காலமாக இரு நாட்டு இராணுவங்களுக்கும் இடையில் நிலவும் நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் ஜெனரல் பிக்ரம் சிங் உள்ளிட்ட ஐவரதும் விஜயம் அமைந்துள்ளது என இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

# மோட்டார் வாகன வரியை உடனடியாக குறைக்க முடியாது

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய மோட்டார் வாகனங்களுக்கு விதிக்கப்படும் அதிகளவு சுங்கவரியை உடனடியாக குறைக்க முடியாது என்று அரசாங்கம் தெவிரித்துள்ளது.

இந்திய மோட்டார் வாகன ஏற்றுமதியாளர்களுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் வரி அதிகரிப்பு, மேற்கொள்ளப்பட்டதாகவும், இது குறித்து இந்திய அரசாங்கம் கொழும்பிலுள்ள தமது தூதரகம் மூலம் இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தது.

எனினும் உடனடியாக இந்த வரி குறைப்பை மேற்கொள்ள முடியாது என்று அரசாங்கம் கூறியுள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள பிரதிநிதி அமைச்சர் சரத் அமுனுகம, இந்த வரி அதிகரிப்பு இந்தியாவின் மீதான நேரடி நடவடிக்கை அல்ல. மாறாக ஏற்றுமதி வருமானம் போதாது என்பதால், அதைச் சமப்படுத்திக் கொள்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

# ஆட்கடத்தல் நடவடிக்கை பின்னணியில் பயங்கரவாதிகள்

## தூதுவர் திசரசமரசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளின் பின்னணியில் பயங்கரவாதிகள் செயற்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் படகு மூலம அவுஸ்ரேலியாவிற்கு ஆட்கள் கடத்தப்பட்டு வருவதாகவும், இதன் பின்னணியில் பயங்கரவாதிகளே செயற்பட்டு வருவதாகவும் அவுஸ்ரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் திசர சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி சேகரிக்கும் நோக்கில் இவ்வாறு சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், எந்தப் பயங்கரவாத அமைப்பிற்காக இவ்வாறு நிதி திரட்டப்படுகின்றது என்பது பற்றி அவர் தெரிவிக்கவில்லை.

நாடு கடத்தப்பட்டு வரும் புகலிடக் கோரிக்கையாளர்கள் துன்புறுத்தப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

# வெலிக்கடை சம்பவ அறிக்கை சமர்ப்பிக்க காலதாமதமாகும்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பான அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் குழுவின் உத்தியோகத்தர்கள் அந்த அறிக்கையை தயாரிப்பதற்கு வழங்கிய கால அவகாசம் போதியதாக இல்லையென தெரிவித்ததையடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஜி.எஸ்.விதானகே குறிப்பிட்டார்.

இதனைக் கருத்திற்கொண்டே அறிக்கை சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்ட கால அவகாசத்தை 8 வாரங்களால் நீடித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

வெலிக்கடை சம்பவம் தொடர்பான அறிக்கை கடந்தவாரம் சமர்ப்பிக்கப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேல் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியின் தலைமையிலான குழுவொன்று இது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

அண்மையில் வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் 27 கைதிகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் தமிழ் சொற்களுக்குரிய ஆங்கில, சிங்கள சொற்கள் சில...

| | ஆங்கிலத்தில் | சிங்களத்தில் |
|---|---|---|
| 1) நேற்று | Yesterday | ஈயே |
| 2) இன்று | Today | அத |
| 3) நாளை | Tomorrow | ஹெ(t)ட |
| 4) தயவுசெய்து | Please | கருணாகர |
| 5) அழகான | Beautiful | லஸ்ஸன |
| 6) நல்ல | Good | ஹெந்த |
| 7) நல்லது | Good | ஹொந்தாய் |
| 8) காலை | Morning | உதே |
| 9) பகல் | Noon | தவல் |
| 10) மாலை | Evening | சவச |
| 11) இரவு | Night | ரா(த்)திரிய |
| 12) முற்பகல் | A.M | பெரவறு |
| 13) பிற்பகல் | P.M | பஸ்வறு |

### பிரதான உணவு வகைகள்

| | | |
|---|---|---|
| 1) சோறு | Rice | b (பத்) |
| 2) பாண் | Bread | பாண் |
| 3) ரொட்டி | Roddy | ரொட்டி |
| 4) பிட்டு | Pittu | பிட்டு |
| 5) அப்பம் | Hopper | ஆப்ப |
| 6) பாற்சோறு | Milk rice | கிரி(b)பத் |
| 7) தோசை | Thosai | தோசே |
| 8) பயறு | Green gram | முங்அட |

### உடல் உறுப்புக்கள்

| | | |
|---|---|---|
| 1) தலை | Head | ஹிஸ |
| 2) கண் | Eye | அச |
| 3) காது | Ear | கண |
| 4) வாய் | Mouth | கட |
| 5) மூக்கு | Nose | நாசய |
| 6) வயிறு | Stomach | b(பட) |
| 7) கை | Hand | அத |
| 8) பாதம் | Foot | ககுல |

### வகுப்பறைப் பொருட்கள்

| | | |
|---|---|---|
| 1) புத்தகம் | Book | பொ(த்)த |
| 2) பென்சில் | Pencil | பன்சலய |
| 3) பேனா | Pen | பேன |
| 4) மேசை | Table | மேசய |
| 5) கதிரை | Chair | பு(ட்)டுவ |
| 6) தும்புத்தடி | Brooms | கொஸ்ஸ |



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013
பகுதி - I
1.30 மணி
கல்வி முரசு
வெளியீடு 21



S.T.திலக்

01) மரங்களில் காணப்படும் இயற்கையான பொந்துகளில் வாழும் பிராணி எது?
1) பாம்பு 2) காகம் 3) அணில் 4) கிளி

2) ஒரே குழுவாக ஓரிடத்தில் வாழும் பிராணிகளின் கூட்டம் எது?
1) காகம் 2) கிளி 3) வௌவால் 4) கறையான்


3) இளம் மஞ்சள் நிறம் சார்ந்த முட்டைகளையிட்டு, இனம் பெருக்கும் பிராணி எது?
1) தேனீ 2) நத்தை 3) தவளை 4) ஓணான்

4) கோழி முட்டையிலிருந்து குஞ்சு பொரிப்பதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு?
1) 18 நாட்கள் 2) 19 நாட்கள் 3) 20 நாட்கள் 4) 21 நாட்கள்


5) உங்கள் சுற்றாடலில் வாழும் ஈருடக வாழி (உபயவாழி) எது?
1) தவளை 2) ஆமை 3) முதலை 4) பாம்பு

6) சமையலறையில் இரவில் கரப்பான் பூச்சிகளின் நடமாட்டத்தை தடுக்கும் எளிய வழி எது?
1) கையால் பிடித்து அழித்தல் 2) மின்குமிழை ஒளிர விடல்
3) பூச்சி மருந்து விசிறல் 4) பொறியுணவை வைத்தல்

7) புத்தக அலுமாரியில் உள்ள புத்தகங்களுக்கிடையே மறைந்த வாழும் பிராணி எது?
1) 2) 3) 4)



8) பின்வரும் பிராணிகளுக்கிடையே வேறுபட்ட இயல்புடைய பிராணி எது?
1) 2) 3) 4)



9) சிங்கள, தமிழ் புத்தாண்டுக்காலம் நெருங்கி வருவதை முன்னறிவிக்கும் பிராணி எது?
1) காகம் 2) ஆட்காட்டி குருவி 3) குயில் 4) மலைக்காகம்

10) மலை நாட்டுப்பகுதியில் வாழும் மக்களுக்கு பெரும்பிரச்சினையாக உள்ள பிராணி
1) நத்தை 2) அட்டை 3) யானை 4) காட்டுப்பன்றி

11) சமாதானத்தின் சின்னமாக கருதப்படும் பிராணி எது?
1) மாடப்புறா 2) வெள்ளைப்புறா 3) மணிப்புறா 4) வெள்ளை அன்னம்

12) சுற்றாடலில் சேரும் அழுக்குகளை உண்டு சுற்றாடலைச் சுத்தமாக்கும் பிராணி எது?
1) நாய் 2) பன்றி 3) காகம் 4) கோழி

13) அழகான கூடுகளை அமைக்கும் பிராணி எது?
1) சிலந்தி 2) தையல் குருவி 3) தூக்கணம் குருவி 4) கிளி

14) இலங்கையில் மட்டும் வாழும் இலங்கைக்குரிய பிராணி?
1) ஆட்காட்டி குருவி 2) சருகுமான் 3) பெலிக்கன் 4) தீக்கோழி

15) இலங்கையில் வன விலங்குகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள விலங்குகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்?
1) பின்னவல 2) வில்பத்து 3) குமண 4) யால


16) இலை குழைகளை உக்கலடையச் செய்து, மண்ணின் வளத்தை அதிகரிக்கும் பிராணி
1) கறையான் 2) மண்புழு 3) காளான் 4) காகம்

17) இலங்கைக்கு மட்டுமே உரித்தான பறவை எது?
1) கொக்கு 2) மயில் 3) காட்டுச்சேவல் 4) கிளி

18) எதிரி வாலைப்பிடிக்க முயலும்போது, தனது வாலைப் பிய்த்துக்கொள்ளும் பிராணி
1) உடும்பு 2) கபறக்கொயா 3) பல்லி 4) ஓணான்

19) எதிரிகளைக் கண்டவுடன் உடலை வளையம் போல சுருட்டிக்கொள்ளும் பிராணி எது?
1) மண்புழு 2) நத்தை 3) மரவட்டை 4) ஆமடில்லா

20) நான்கு மாணவர்கள் நத்தையை அவதானித்து வரைந்த வரிப்படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றில் நத்தையின் உறுப்புக்களை மிகச் சரியாகக் காட்டும் உரு எது?
1) 2) 3) 4)



21) பகல் வேலையில் நடமாடும் பிராணி எது?
1) வீட்டு ஈ 2) வெளவால் 3) மின்மினிப்பூச்சி 4) கரப்பான்பூச்சி

22) தாய்நாய் குட்டியை வாயால் தூக்கிச் செல்ல கௌவுவது குட்டியின்
1) காதுகளை 2) வயிற்றுப்பகுதியை 3) கால்களை 4) கழுத்துப்பகுதியை

23) பின்வரும் பிராணிகளில் ஊர்வன (நகருரியி) எது?
1) தும்பி 2) தவளை 3) மயில் 4) ஆமை

24) முட்டைகளை அடைகாத்து குஞ்சு பொரிக்காத பிராணி
1) காகம் 2) பருந்து 3) தேன்சிட்டு 4) முதலை

25) தான் வாழும் சூழலின் நிறத்திற்கு ஏற்ப, உடலின் நிறத்தை மாற்றும் பிராணி எது?
1) பச்சோந்தி 2) ஓணான் 3) பச்சிலைப்பூச்சி 4) கிளி



26) எதிரிகள் துரத்திச் செல்லும்போது தப்பிச்செல்ல துர்மணத்தை வெளிவிடும் பிராணி?
1) முயல் 2) ஆந்தை 3) நரி 4) கணவாய்

27) இளமைப்பருவத்தில் பால் குடித்து வளரும் பிராணி பின்வருவனவற்றுள் எது?
1) ஆமை 2) வெளவால் 3) முதலை 4) புள்ளைப்பூச்சி

28) மிகமிக உயரமான இடங்களில் கூடுகளை அமைத்து, முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் பிராணி பின்வருவனவற்றுள் எது?
1) கழுகு 2) முதலை 3) வெளவால் 4) மைனா

29) அணில் மரத்துக்கு மரம் தாவும்போது, உடலின் சமநிலையைப் பேணுவது?
1) கால்கள் 2) வால் 3) உடல்நிலை 4) மீசை

30) இரவில் திரியும் பறவையாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?
1) கோட்டான் 2) சாக்குருவி 3) மீன்கொத்தி 4) ஆந்தை

31) ஒரு நோயாளிக்கு ஒருவேளை மூன்று மாத்திரை வீதம், நாளொன்றுக்கு இரு தடவைகள் மாத்திரைகள் உட்கொள்ள வேண்டும். இந்நோயாளிக்கு 18 மாத்திரைகள் எத்தனை நாளைக்குப் போதுமானது?
1) 5 நாட்கள் 2) 4 நாட்கள் 3) 3 நாட்கள்

32) ஒரு ஒலே மென்பானப் போத்தல் மூலம் 3 பேரை உபசரிக்கலாம் எனில், 20 பேரை உபசரிக்க எத்தனை ஒலே மென்பானப் போத்தல் வாங்க வேண்டும்?
1) 6 போத்தல் 2) 7 போத்தல் 3) $5\frac{2}{3}$ போத்தல்

33) ஒரு மாணவனின் பைக்கற்றில் 9 நாணயங்கள் உள்ளன. இவற்றின் பெறுமதி ரூ.15.00 எனில், அந்த மாணவனின் பைக்கற்றில் இருந்த நாணயங்கள் எவை?
1) ஐந்து ரூபா - 2, இரண்டு ரூபா - 2, ஒரு ரூபாய் - 5
2) ஐந்து ரூபா - 2, ஒரு ரூபாய் - 3, 50 சதம் - 4
3) ஐந்து ரூபா - 1, இரண்டு ரூபாய் - 3, ஒரு ரூபாய் - 1, 50 சதம் - 2

34) அனோஜன் மாலைவேளை நடந்து சென்றபோது அவனது நிழல், அவனது வலதுகைப் பக்கமாக அசைந்து வந்தது எனில், அவன் நடந்து செல்லும் திசை எது?
1) கிழக்கு 2) வடக்கு 3) தெற்கு

35) குரு தெற்கு நோக்கி நிற்கும்போது வலது கைப்புறமாக இரு தடவை செங்கோணமாகத் திரும்பினான். குரு தற்போது நோக்கியிருக்கும் திசை எது?
1) மேற்கு 2) வடக்கு 3) கிழக்கு

36) பின்வருவனவற்றில் செங்கோணமுள்ள ஆங்கில பெரிய எழுத்துக்கள் எவை?
1) T, L,H 2) N,K,L 3) K.L.H

37) கனவுரு ஒன்றிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
1) 04 2) 20 3) 24

38) 31 நாட்களைக்கொண்ட மாதம் எது?
1) சித்திரை 2) ஆவணி 3) ஐப்பசி

39) நாணயத்தாள்களில் பெறுமதி கூடிய நாணயத்தாள் எது?
1) ரூபா. 500 2) ரூபா 1000 3) ரூபா 2000

40) 8943 என்ற எண் குறியில் இலக்கம் 9 இன் இடப் பெறுமானம் யாது?
1) ஆயிரம் 2) நூறு 3) பத்து 4) ஒன்று

# குஜராத்தில் மீண்டும் முதல்வர் மோடி

## இமாச்சல ஆட்சியை இழந்தது பா.ஜ.க



(புதுடில்லி)

குஜராத் மாநில சட்டசபைத் தேர்தலில் மீண்டும் பாரதிய ஜனதா வெற்றி பெற்றுள் ளது. குஜராத்தில் 4ஆவது முறையாக நரேந்திர மோடி முதல்வராக பொறுப்பேற்க இருக்கிறார்.

ஆனால் பா.ஜ.க வசம் இருந்த இமாச்சலப் பிரதேசத்தை காங்கிரஸ் கட்சி கைப்பற்றி இருக்கிறது.

குஜராத் மாநிலத்தின் 182 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை நேற்று காலை தொடங்கியது. தொடக்கத்தில் காங்கிரஸ் மற்றும் புா.ஜ.க ஆகிய இரு கட்சிகளும் சம எண்ணிக்கையில் இருந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால் பின்னர் கணிசமான எண்ணிக்கையில் பா.ஜ.க முன்னிலை வகித்து ஆட்சி அமைக்கத் தேவையான அறுதிப் பெரும்பான்மையையும் தாண்டியது. இதானால் அம்மாநிலத்தில் பா.ஜ.க ஆட்சி அமைப்பது உறுதியாகி இருக்கிறது.


குஜராத் மாநிலத்தின் முதல்வராக 4ஆவது முறையாக நரேந்திர மோடி பொறுப்பேற்க உள்ளார்.

2001ஆம் ஆண்டு கேசுபாய் பட்டேல் நீக்கப்பட்டு மோடி முதல்வராக்கப்பட்டார். பின்னர் 2002,2007 தேர்தல்களி லும் மோடி வெற்றி பெற்று முதல்வரானார்.

தற்போது 4 ஆவது முறையாக மீண்டும் மோடி முதல்வராக பொறுப் பேற்க இருக்கிறார். இதேபோல இமாச்சலப் பிரதேசத்தில் முதல் சில மணி நேரங்களில் ஆளும் பா.ஜ.கவும் காங்கிரஸ் கட்சியும் சம எண்ணிக்கையில் இருந்து வந்தன.

பின்னர் காங்கிரஸ் கட்சி கணிசமான தொகுதிகளில் முன்னிலை வகித்து ஆட்சியைப் பிடிக்கும் நிலைக்கு முன்னேறியது.

பா.ஜக வசம் இருந்த இமாச்சலப் பிரதேசம் காங்கிரஸ் வசம் சென்றிருப்பதால் அக் கட்சிக்கு உற்சாகம் கிடைத்திருக்கிறது.



டில்லி வந்த கம்போடிய பிரதமர் ஹன்சென்னை மிகுந்த பணிவுடன் வரவேற்கும் அந்நாட்டு தூதரக அதிகாரிகள்.

# உலகம் அழியப்போவதாக கூறி பணத்தை வழங்கிய வியாபாரி

(புதுடில்லி)

உலகம் இன்றைய தினம் அழியும் எனப் பரவி வரும் தகவலால் தர்மபுரியில் வியாபாரி ஒருவர் வங்கியில் இருந்த தனது பணத்தை எடுத்து வந்து மக்களுக்கு விநியோகித்தார். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மாயன் கலண்டரில் 21-12-2012 திகதிக்கு பின்னர் திகதி பொறிக்கப்படவில்லை. எனவே இன்றைய தினத்துடன் உலகம் அழிந்து விடும் என்ற கருத்து கடந்த சில தினங்களுக்கு முன்பு உலகம் முழுவதும் பரவியது. இது ஒரு சிலரிடையே அச்சத்தை ஏற்படுத்தியது. இதனால் உலகம் அழியும் என்று ஒரு தரப்பினரும், அழியாது என்று மற்றொரு தரப்பினரும் கூறி வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டம் அரூர் அடுத்த ஆர்.கோபிநாதம்பட்டியை சேர்ந்த கரும்பு வியாபாரி குழந்தைதம்பி (வயது-55), 21ஆம் திகதியுடன் உலகம் அழியப் போகிறது என்றும் அதனால் இப்பகுதி மக்கள் அனைவரும் சந்தோஷமாக இருக்க வேண்டும் எனக் கூறி நேற்றுமுன்தினம் வங்கியில் இருந்து 1 இலட்சம் ரூபா பணத்தை எடுத்து வந்து அப்பகுதி மக்கள் சிலரிடம் 1000, 2,000 என விநியோகம் செய்தார்.

மேலும் அவர் மக்களிடம் கூறும்போது, 21ஆம் திகதியுடன் உலகம் அழியப் போகிறது. அதனால் நீங்களும் உங்கள் குழந்தைகளும் சந்தோஷமாக இருக்க வேண்டும். உலகம் அழிந்து விட்டால் நிறைவேறாத ஆசைகளால் ஆத்மா சாந் தியடையாது.

எனவே உங்கள் குழந்தைகளின் ஆசைகளை நிறைவேற்றுங்கள். ஒருவேளை 21ஆம் திகதி உலகம் அழியா விட்டால் இந்தப் பணத்தை திருப்பி கொடுங்கள் எனக் கூறியுள்ளார்.

# கட்டடம் இடிந்து வீழ்ந்து புனேவில் 13 பேர் பலி



மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 13 பேர் பலியான சம்பவம் நடந்துள்ளது.

புனே- வாகோலி என்னுமிடத்தில் ஆயுர்வேத கல்லூரி கட்டப்பட்டு வருகிறது.

இந்த கட்டடத்தின் 4ஆவது மாடியின் கட்டுமானப் பணியில் ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தபோது, ஒரு சிமெண்ட் தூண் திடீரென இடிந்து விழுந்தது. இந்த இடிபாடுகளில் சிக்கி 13 தொழிலாளர்கள் உடல் நசுங்கிப் பலியானார்கள்.

இன்னும் பலர் சிக்கியுள்ளதால் அவர்களை மீட்கும் பணியில் தீயணைப்பு படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர.

# அடுத்த ஐம்பது வருடத்தில் கடலில் மூழ்குமா சென்னை?

(சென்னை)

புவியின் வெப்பம் அதிகரித்து வருவதால் இன்னும் 50 ஆண்டுகளில் சென்னை உட்பட தமிழகத்தின் கடற்கரையோரப் பகுதிகள் கடலுக்குள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இந்திய அறிவியல் காங்கிரஸ் கூட்டமைப்பின் நூற்றாண்டு விழா கடந்த இரண்டு நாட்களாக சென்னை மத்திய தோல் ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்றது.

இதில் தமிழகம் முழுவதும் இருந்து ஏராளமான அறிவியல் ஆய்வாளர்கள் கலந்து கொண்டு பேசினர்.

அப்போது, கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 2 டிரில்லியன் தொன் ஐஸ் கட்டிகள் உருகி விட்டதாகவும், எதிர்காலத்தில் சென்னை உட்பட ஏராளமான பகுதிகள் கடலுக்குள் மூழ்க வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் எச்சரித்தனர்.

மேலும இம்மாநாட்டின் தீர்மானங்களையும், முக்கியமான பரிந்துரைகளையும் வரும் 22 ஆம் திகதி அறிவியல் காங்கிரஸ் கூட்டமைப்பினர் பிரதமரிடம் வழங்கவுள்ளனர்.

# தரமற்ற பொருட்கள் சீனா மீது நடவடிக்கை

இந்தியாவில் தரமற்ற பொருட்களைக் குவிக்கும் சீனாவின் நடவடிக்கையைத் தடுக்க அரசுக்கு புகார் வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இறக்குமதியாகும் சீனப் பொருட்களின் தரம் குறித்து, உரிய 'ஆதாரங்களுடன் புகார் செய்யப்பட்டால், மத்திய அரசு அதைத் தடுக்கும் என மாநிலங்களவையில் வர்த்தகத் துறை இணை அமைச்சர் புரந்தேஸ்வரி தெரிவித்தார். தரமற்றப் பொருட்களைக் குவிப்பதை எதிர்த்து நடவடிக்கை எடுக்க, உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினர் என்ற வகையில் இந்தியாவுக்கு அதிகாரம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தியச் செய்திகள்

# அணு ஆயுத பிரிதிவி - 2 சோதனை வெற்றி



(புவனேஸ்வர)

இந்தியா தனது இராணுவத்துக்கு தேவையான அக்னி மற்றும் பிரிதிவி ரக ஏவுகணைகளைத் தயாரித்து சோதனை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் தற்போது இராணுவ விஞ்ஞானிகள் பிரிதிவி ஏவுகணை வரிசையில் பிரிதிவி-2 என்ற நவீன ஏவுகணையை உருவாக்கி உள்ளனர். இந்த வகையில் நேற்றைய தினம் பிரிதிவி-2 ஏவுகணை சோதனையை இந்தியா நடத்தியது.

இது அணு ஆயுதங்களைத் தாங்கிச் சென்று குறிப்பிட்ட இலக்கை தாக்கக்கூடிய வல்லமை வாய்ந்தது. நேற்றுக் காலை 9.21 மணிக்கு ஒரிசா மாநில கடற் கரையில் சண்டிப்பூர் அருகே உள்ள பலாசூர் ஏவுகணைதளத்தில் இருந்து ஏவுகணை ஏவப்பட்டது.

இது வெற்றிகரமாக பறந்து சென்றது. சோதனை வெற்றிகரமாக அமைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது 500 கிலோ முதல் 1000 கிலோ எடையுள்ள அணு ஆயுதங்களைச் சுமந்தவாறு 350 கி.மீதொலைவில் பறந்து சென்று இலக்கைத தாக்கக் கூடியது.

இதற்கு முன் பிரிதிவி ஏவுகணை சோதனை கடந்த அக்டோபர் மாதம் 4ஆம் திகதி இதே இடத்தில் நடந்தது. 2 மாதத்தில் மீண்டும் சோதனை நடத்தப்பட்டுள்ளது.



# அணுஆயுத தயாரிப்பை கைவிடாவிடின்

# ஈரான் மீது கடுமையான நடவடிக்கை

## அமெரிக்கா எச்சரிக்கை



அணு ஆயுதம் தயாரிக்க ஈரான் தீர்மானித்திருப்பது, அந் நாட்டுக்கு ஆபத்தானதாக இருக் கும். அதைத் தடுக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் கடைசித் தெரிவாகத்தான் போர் நடவடிக்கை இருக்கும் என்று அமெ ரிக்கா கூறியுள்ளது. இதுபற்றி, அமெரிக்கப் பாதுகாப்புத் துறை செயலாளர் லியோன் பானெட்டா கூறியதாவது:


ஈரான் விடயமாக அமெரிக் காவும்,இஸ்ரேலும் குறிக்கோளு டன் கூடிய ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன. ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதை இரு நாடுகளுமே விரும்பவில்லை. அமெரிக்கா ஏற்கனவே தனது நிலையை தெளிவுபடுத்தி விட்டது. அதேபோல, இஸ்ரே லும் தனது நிலைப்பாட்டை விளக்கிவிட்டது. தற்போதுள்ள கேள்வி என்னவெனில், அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட 'வேண்டாமென்று ஈரானை இரு நாடுகளும் எப்படி வலியுறுத்து வது என்பது தான்.

இந்த விடயத்தில், சர்வதேச சமுதாயமும் ஒன்று சேர்ந்துள் ளன. ஈரான் தனது அணுசக்தி திறனை வளர்க்கும் முயற்சியை தொடருமானால், அதற்கு தண் டனையாக பொருளாதார நெருக கடி, தூதரக ரீதியிலான, இராஜ ரீதியிலான நெருக்கடிகளை அளிக்க சர்வதேச நாடுகள் முன் வந்துள்ளன. ஈரான் விடயத்தை கையாளும்போது, அந்நாட்டின் மீது போர் தொடுப்பதை கடைசி முயற்சியாகத் தான் வைத்துக் கொள்ள வேண்டும் தொடக்கத் திலேயே சண்டை கூடாது என்று இஸ்ரேல் பிரதமர் கூட கூறி யுள்ளார்.

எனவே, ஈரான் விடயத்தில் அனைத்து வகையான வாய்ப்பு களும் அந்நாட்டுக்கு அளிக்கப் படும். எந்தவொரு முயற்சியும் கைவிடப்படமாட்டாது. இந்த விவகாரத்தில் சுமுகமான தீர்வு ஏற்படும் என்றே நம்புகிறோம். அதே சமயத்தில்,அணு ஆயு தங்கள் தயாரிப்பதை ஈரான் நிறுத்திக்கொள்ளவில்லை எனில், அந்நாட்டுக்கு எதிராக அமெ ரிக்கா கடுமையான நடவடிக் கைகளை ஏடுக்கவும் தயங்காது என்பதையும் தெரிவிக்கிறேன் என்றார், லியோன்.

உலகச் செய்திகள்

# ஐந்து புதிய கோள்களில் மனிதன் உயிர் வாழலாம்



பூமியைப் போன்று 5 புதிய கோள்கள் இருப் பதாகவும், அவற் றில் மனிதன் வாழ் வதற்கு ஏற்ற சூழ் நிலை இருப்பதாக வும் விஞ்ஞானி கள் கண்டுபிடித் துள்ளனர்.

அவுஸ்ரேலியா, சிலி, இங்கிலாந்து மற்றும் அமெரிக் காவைச் சேர்ந்த சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் கடந்த 14 ஆண்டு களாக சூரியனைப் போன்ற டாவ் செட்டி என்ற நட்சத்திரம் மற் றும் அதன் அருகில் உள்ள கோள்கள் பற்றி ஆய்வு செய்தனர்.

இதில் 5 கோள்கள் டாவ் செட்டி நட்சத்திரத்தை சுற்றி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கோள்களில் மிகச்சிறிய கோளானது, பூமியைவிட கிட்டத்தட்ட 2 மடங்கு பெரியதாகும். இந்த கோள்கள் ஒன்றுடன் ஒன்று ஈர்ப்பு விசையால் இணைக்கப்பட்டுள் ளன.

இவை மனிதன் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளை வழங்கும். அந்தக் கோள்கள் மிகத் தொலைவில் இருக்கின்றன. ஒளியின் வேகத்தில் சென்றால் 12 ஆண்டுகளில் இந்தக் கோள்களை அடைய முடியும் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

# வெனிசுலா ஜனாதிபதிக்கு சுவாசப்பாதையில் தொற்று



வெனிசுலா அதிபர் ஹுயூகோ சாவேஸ் சுவாசப் பாதையில் கிருமித் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அவருக்கு கியூபாவில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட் டது. கடந்த வாரத்தில் நடைபெற்ற 6 மணி நேர அறுவைச் சிகிச்சைக்குப் பின் அவரது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியானது. இந்நிலையில் அவரது சுவாசப் பாதை யில் கிருமித் தொற்று ஏற்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து அவருக்கு தீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள் ளது. வரும் நாட்களில் அவர் தொடர்ந்து ஓய்வில் இருக்க வேண்டுமென்று சிகிச்சை அளித்து வரும் டாக்டர்கள் தெரிவித் துள்ளனர். தீவிர அமெரிக்க எதிர்ப்புக் கொள்கை உடைய சோஷ லிஸ தலைவரான சாவேஸ், வெனிசுலா நாட்டின் அதிபராக 13 ஆண்டுகளாகத் தொடர்கிறார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற அதிபர் தேர்தலிலும் அவர் வெற்றி பெற்றார்.

# மெக்ஸிக்கோவில் சிறை உடைப்பு வன்முறைகளில் 17 பேர் பலி



மெக்ஸிக்கோவிலுள்ள சிறைச் சாலையொன்றைச் சேர்ந்த கைதி கள் சிறைச்சாலையை உடைத் துக்கொண்டு தப்பிச்செல்ல முற் பட்டபோது ஏற்பட்ட மோதலில் சுமார் 17 பேர் கொல்லப்பட்ட னர்.

வடக்கு மெக்ஸிக்கோவில் டூரங்கோ மாநிலத்திலுள்ள சிறைச் சாலையொன்றிலேயே கடந்த செவ்வாய்க்கிழமை இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள் ளது.

சுரங்கப்பாதையினூடாகத் தப்பிச்செல்ல முற்பட்டபோது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டிலேயே சிறைக்கைதிகள் 11 பேரும் சிறைக்காவலர்கள் 6 பேரும் இவ்வாறு கொல்லப் பட்டதாக அந்நாட்டு அதிகாரி கள் கூறியுள்ளனர்.

வன்முறை மற்றும் குற்றச் செயல்களை கையாள்வதற்காக தேசிய பொலிஸ் படையை உரு வாக்கவுள்ளதாக மெக்ஸிக்கோ ஜனாதிபதி என்றிக் பெனா நிய்டோ அறிவித்ததற்கு அடுத்த நாள்இச்சம்பவம் இடம்பெற் றுள்ளதாக அந்நாட்டுச் செய்தி கள் தெரிவித்துள்ளன.

மெக்ஸிக்கோ ஜனாதிபதி என்றிக் பெனா நிய்டோ டிசம் பர் மாதம் முதலாம் திகதி ஆட் சிக்கு வந்த பின்னர் மெக் ஸிக்கோ சிறைச்சாலையில் இடம் பெற்ற முதலாவது வன்முறைச் சம்பவம் இதுவென்பது குறிப் பிடத்தக்கது.

# தென்கொரிய ஜனாதிபதியாக முதல் முறையாக பெண் தேர்வு

தென் கொரியாவில் முதல் முறையாக பெண் ஒருவர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

தற்போது அதிபராகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள பார்க் ஹ்யாங ஹேயின் தந்தை ஒரு இராணு வச்சதிப் புரட்சியில் ஆட்சியை பிடித்த பிறகு 18 ஆண்டுகள் நாட்டின் அதிபராக இருந்தார்.

அவரது தந்தையும் முன் னாள் சர்வாதிகாரியுமான பார்க் யுங் ஹீ 1979 ஆம் ஆண்டு சுட் டுக் கொல்லப்பட்டார்.

மிகவும் நெருக்கமாக இருந்த போட்டியின் இறுதியில், பார்க் அவர்களை எதிர்த்துப் போட்டி யிட்ட லிபரல் கட்சியின் வேட்பா ளர் மூன் ஜேயின் தனது தோல வியை ஒப்புக் கொண்டுள்ளார்.

60 வயதாகும் செல்வி பார்க், தற்போது அதிபராக இருக்கும் லீ ம்யுங் பார்க் அவர்களிடமி ருந்து பொறுப்பேற்றுக் கொள் வார்.

நாட்டின் செல்வங்களை அனை வருக்கும் பிரித்தளிக்க பார்க் ஹ்யாங் ஹே உறுதியளித்துள் ளார். நாட்டில் ஒரு புதிய தேசிய மகிழ்ச்சிக்கான சகாப்தம் தொடங்கியுள்ளது என்று தனது வெற்றிக்கு பிறகு, ஆதரவா ளர்களிடையே பேசும் போது பார்க் தெரிவித்தார்.

தற்போது வட கொரிய மற்றும் தென் கொரிய நாடுகளி லும், இராணுவத் தலைவர்க ளின் வாரிசுகளே நாட்டை ஆளும சூழல் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.





அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரில் பிளானட் ஹொலிவுட் ரிசார்ட்டில் நடை பெற்ற பிரபஞ்ச அழகி 2012 போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த ஒலிவியா கல்போ பட்டத்தை வென்றார்.

# தற்காப்பிற்காக துப்பாக்கியுடன் பாடசாலைக்கு வந்த சிறுவன்



அமெரிக்காவின் நியூடவுனில் உள்ள பாடசாலை ஒன்றில் நடந்த துப்பாக்கிச்சூட்டையடுத்து அப்படி ஏதாவது நடந்தால் தன்னை பாதுக் காத்துக்கொள்ள உடாவில் 6ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் பாடசா லைக்கு துப்பாக்கியுடன் வந்துள் ளான். அமெரிக்காவில் உள்ள நியூ இங்கி லந்து மாகாணத்தின் கனக்டிக்கட்டில் இருக்கும் நியூட வுன் என்ற இடத்தில் சாண்டி ஹுக் என்ற தொடக்கப் பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை ஒரு வாலிபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 20 குழந்தைகள் உட்பட 26 பேர் பலியாகினர். இந்நிலையில் உடாவில் உள்ள மேற்கு கியர்ன்ஸ் பகுதியில் இருக்கும் தொடக்கப் பள்ளியில் 6ஆம் வகுப்பு படிக்கும் 11 வயது மாணவன் ஒருவன் நேற்று முன்தினம் பாடசாலைக்கு துப்பாக்கி மற்றும் தோட்டாக் களை கொண்டு வந்துள்ளான். அவன் பையில் துப்பாக்கி இருப் பதைப் பார்த்து பயந்துபோன 2மாணவர்கள் இது குறித்து ஆசிரி யையிடம் தெரிவித்தனர். அவர் உடனே பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார்.பொலிஸார் விரைந்து வந்து துப்பாக்கியையும், தோட் டாக்களையும் பறிமுதல் செய்தனர். அந்தச் சிறுவன் தன் துப் பாக்கியில் தோட்டாவை நிரப்பவில்லை. ஆனால் சக மாணவன் ஒருவனின் தலையில் துப்பாக்கியை வைத்தான் என்று கூறப் படுகிறது. இது குறித்து பொலிஸார் விசாரணை நட்த்தி வரு கின்றனர். அந்த சிறுவனிடம் விசாரித்தபோது, யாராவது தன்னை துப்பாக்கியால் சுட்டால் தற்காத்துக் கொள்ளவே தான் துப்பாக்கி கொண்டு வந்ததாகத் தெரிவித்துள்ளான்.

# சட்டத்தரணிகள் சங்க தலைவரின் வீடு மீது அதிகாலை துப்பாக்கிச் சூடு!

## இது கொலை அச்சுறுத்தலா? தெற்கில் பரபரப்பு

(கொழும்பு)

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவரின் வீடு நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இத்துப்பாக்கிச் சூடு மேற்படி சட்டத்தரணிகள் சங்கத் தலைவருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுப்பதற்காக நடத்தப்பட்டதா? என்ற தோரணையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருமான விஜயதாச ராஜபக்ஷவின் வீட்டுச் சுவரில் துப்பாக்கி ரவைகள் துளைத்துள்ளமைக்கான அடையாளங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், மேற்படி எம்.பி.யின் வீட்டு வளாகத்திலிருந்து நேற்றுக் காலை துப்பாக்கி ரவைகள் மூன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திவரும் மிரிஹான பொலிஸார் தெரிவித்தனர்.

நாவல, விஜயபா மாவத்தையில் அமைந்துள்ள விஜயதாச எம்.பி.யின் வீட்டின் மீது நேற்று அதிகாலை இனந்தெரியாத ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் மிரிஹான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொலிஸார், இதன்போது ரொகீ என்கிற மோப்ப நாயையும் சம்பவ இடத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைகளை துரிதப்படுத்தி வருகின்றனர். அதுடன், விஜயதாச எம்.பி.யின் வீடு அமைந்துள்ள பகுதிக்கு நேற்று முன்தினம் நள்ளிரவு வாகனமொன்று வந்ததாக தகவல் கிடைத்துள்ளதாகவும் அவ வீட்டுக்கு முன்னால் வைத்து எவர் மீதேனும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு ஆதரவாக மிகத் தீவிரமாக மேற்படி சட்டத்தரணி செயற்பட்டுவருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை விஜயதாச ராஜபக்ஷ எம்.பி.யின் வீட்டின் மீது நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகக் கூறப்படும் செய்தி அறிந்ததை அடுத்து ஜனாதிபதி அவரது வீட்டுக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயத்தில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரும் கலந்து கொண்டதாகவும், விஜயதாச எம்.பி.யின் வீட்டில் ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் சுமார் 30 நிமிட நேரத்தை செலவிட்டு அவருடன் கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோனைத் தொடர்புகொண்ட ஜனாதிபதி, மேற்படி துப்பாக்கிச் சூடுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு உத்தரவிட்டார்.


# சுவர்க்கவாசல் ஏகாதசி விரதம்

(குருநகர்)

அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் 24 ஆம் திகதி திங்கட்கிழமை சுவர்க்கவாசல் ஏகாதசித் தீர்த்தம் பக்திசிரத்தையுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9.00 மணிக்குச் சிறப்புச் சமயச் சொற்பொழிவு இடம்பெறும். முற்பகல் 10.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் அதனையடுத்து ஸ்ரீமத் நாராயண சுவாமி ஸ்ரீதேவி பூமாதேவி சமேதராக வீதியுலா எழுந்தருளுவார். மதியம் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசையும் நடைபெறும். (68)

# "சார்க்" கட்டுரைப் போட்டியில் யாழ். இந்து மாணவன் முதலிடம்



'சார்க்' அமைப்பினால் அதன 28 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நாடு தழுவிய ரீதியில் நடத்தப்பட்ட ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களாகிய செல்வன் ஸ்ரீஸ்கந்தராஜா சிவஸ்கந்தஸ்ரீ முதலாம் இடத்தையும், செல்வன் ஜீவரட்ணராஜா ஷஜீவன் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் இசுறுபாய, பத்திரமுல்லையில் அமைந்துள்ள ஜனகலகேந்திர ஹோட்டலில் நடைபெற்றது. இவ்விழாவில் இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சர் திரு.நீயூமோல் பெரேரா மற்றும் 'சார்க்' நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# 588 பேர் கொலை

இந்த வருடம் இலங்கை முழுவதும் பல்வேறு பகுதிகளிலும் குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன. நவம்பர் மாதம் வரை 588 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. அத்தோடு ஒக்ரோபர் மாதம் வரை 244 பெண்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பான வழக்குகளில் 105 வழக்குள் தீர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் வரை 25 பாரதூரமான துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கருக்கலைப்பு தொடர்பான 24 சம்பவங்கள் இந்த வருடம் பதிவாகியுள்ள அதேவேளை வருடம் முழுவதும் 148 விபசார விடுதிகள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன.

## மருத்துவருக்கு...

சம்பவம் இடம்பெற்று உள்ளது. இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட இந்த தாக்குதலில், காது, மூக்கு மற்றும் தொண்டை தொடர்பிலான சத்திரசிகிச்சை நிபுணர் திருமாறனே கடும் காயங்களுக்கு இலக்காகியுள்ளார்.

அவரது கையிலேயே வெட்டுகாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த யாழ். பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மருத்துவ நிபுணர் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

## தெரிவுக்...

எஸ். சிறிஸ்கந்தராசா தலைமையிலான மூவர் அடங்கிய நீதிபதிகள் குழு இது தொடர்பான தீர்ப்பை இன்று அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குற்றவியல் பிரேரணையை விசாரணை செய்யும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவையும் அதன் ஆய்வுகளையும் இரத்துச் செய்யுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் கடந்த புதன்கிழமை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மனுதாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கில்...

இருந்தபோதும் அவற்றின் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுகிறது.

சட்டவிரோத விற்பனையாளர்களும் பெருமளவில் மதுசாரங்களைக் கொள்வனவு செய்து வருவதாகவும் அத்த தகவல்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வழமையில் இருந்து வடபகுதியில் மதுசாரங்களின் விற்பனையில் 60 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் புள்ளி விபரங்களில் இருந்து தெரியவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (68)

# பேராசிரியர் கைலாசபதியின் ஆண்டு நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் பேரிசிரியர் க.கைலாசபதியின் நினைவு நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு திருநெல்வேலி செயற்திறன் அரங்க இயக்க மண்டபத்தில் சோ. தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆய்வரங்கில் ஆற்றுப்படுத்தும் அரங்காகக் கூத்து என்னும் விடயம் பற்றி செல்வி யாழினி யோகேஸ்வரன் ஆய்வுரையும், திருமதி ச.ஜெயந்தி கருத்துரையும் வழங்கவுள்ளனர்.

மேலும் கல்வி முறைமையும் தொழிலாய்வும் என்னும் விடயம் பற்றி நா.சாந்தன், தேசியமும் தொன்மைக்கான வேட்கையும் என்னும் விடயம் பற்றி த.ஸ்ரீபிரகாஸ் ஆகியோர் ஆய்வுரைகளை வழங்கவுள்ளனர். தொடரந்து த.கில்மனின் 'அவசரம்' எனும் ஓரங்க நாடகமும் இடம்பெறவுள்ளது.

# இலங்கையின் பாதுகாப்புக்கு இந்தியா என்றும் கைகொடுக்கும்

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்புக்கு இந்தியாவினால் முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று கொழும்பு வந்துள்ள இந்திய இராணுவ அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் பிக்ரம் சிங், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று உறுதியளித்தார்.

ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய இராணுவ அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் பிக்ரம் சிங் தலைமையிலான குழுவினர், நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினர்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ரஜீவ் தேவாரி, கேணல் எஸ்.கே.ஆச்சர்யா, கேணல் எஸ்.சீ.தேவகன், கப்டன் ரஜீவ் மெத்திவ்ஸ் மற்றும் இந்தியாவின் இலங்கைக்கான தூதுவர் அசோக் கே.காந்தா ஆகியோருடன் இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது இந்திய இராணுவ அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் பிக்ரம் சிங், ஜனாதிபதிக்கு புத்தர் சிலையொன்றைக் அன்பளிப்பு செய்ததுடன், இலங்கையின் பாதுகாப்புக்கு இந்தியா தனது முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் உறுதியளித்தார்.

# கடற்றொழிலில் நவீன தொழில்நுட்பம்

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு கடல் வளங்களைப் பாதுகாப்பது சம்பந்தமாகவும் நவீன தொழில்நுட்ப உத்திகள் தொடர்பாகவும் கடற்றொழில் சட்டவரை முறைகள் சம்பந்தமாகவும் அறிவூட்டல் கருத்தரங்குகள் பிரதேச ரீதியாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளினால் நடத்தப்பட்டு வருகின்றது.

கடற்றொழில் அமைச்சினால் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தியும் கடல் வளங்களை அழிவிற்குள்ளாக்கியும் மேற்கொள்ளப்படும் கடற்றொழில் நடவடிக்கைகளினால் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது குறித்து கடற்றொழிலாளர்களுக்குப் போதிய விளக்கமின்மையினைப் போக்கவே இவ்வாறான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான கருத்தரங்கு ஒன்று ஏற்கனவே தாளையடிப் பகுதியில் வடமராட்சி கிழக்குக் கடற்றொழிலாளர்களுக்கு நடைபெற்றுள்ளது. அத்துடன் நாளை சனிக்கிழமை பருத்தித்துறைப் பிரதேச கடற்றொழிலாளர்களுக்கும், ஞாயிற்றுக்கிழமை யாழ். குடாக் கடலில் தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களுக்கு குருநகரிலும் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளது. (பா)

## அரசியல்...


எதிரான குற்றப்பிரேரணையை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவின் அறிக்கை தொடர்பிலான விவாதம் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூட்டத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசியலமைப்பின் பிரகாரமே குற்றப்பிரேரணை முன்னெடுக்கப்படுகின்றது. இங்கு காட்டுச்சட்டம் அமுல்படுத்தப்படவில்லை. குற்றப்பிரேரணை தொடர்பில் விவாதம் நடத்துமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. அதன் அடிப்படையில் விவாதத்தை நடத்துவதற்கு சபாநாயகர் இணக்கம் தெரிவித்துள்ளார். 2013 ஆம் ஆண்டு நாடாளுமன்றம் கூடும்போது விவாதம் நடத்தப்பட்டும். அந்த அறிக்கைக்கு நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அந்த அறிக்கை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் என்றார்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி





வடமாகாணத்தில் முன்பள்ளி ஆசிரியைகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும் அதேவேளை, இவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவையும் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி வழங்கினார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற வடமாகாண முன்பள்ளி ஆசிரியைகளுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்பள்ளி கல்வித்திட்டத்தை மென்மேலும் மேம்படுத்துவது தொடர்பில் நானும் மாகாண ஆளுநரும் அக்கறை கொண்டுள்ள அதேவேளை, இதுவிடயமாக துறைசார்ந்தவர்களுடனும் அடிக்கடி கலந்துரையாடி பல திட்டங்களையும் வகுத்துள்ளோம்.

அதற்கமைவாக முன்பள்ளி ஆசிரியைகளுக்கு நிரந்தரநியமனம் வழங்கும் பொருட்டு, டிப்ளோமா பயிற்சித்திட்டத்தையும் நடைமுறைப்படுத்தி இந்த நிகழ்வையும் ஏற்பாடு செய்துள்ள அதேவேளை, எதிர்கால வளமான கல்விச் சமூகத்தை வளர்த்தெடுக்கும் முக்கிய பங்கு முன்பள்ளி ஆசிரியைகளையே சார்ந்தது என்றும் தெரிவித்தார்.

அத்துடன் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்த 'ஆறுதல்' நிறுவனத்திற்கு போதிய நிதி வசதிகள் இல்லாத நிலையில் யுனிசெப் நிறுவனம் ஊடாக ஒரு தொகுதி நிதியினை பெற்றுக் கொள்வதற்கு வடமாகாண ஆளுநர் ஊடாக நடவடிக்கை மேற்கொண்டுள்ள அதேவேளை, அரசின் ஏனைய திட்டங்கள் ஊடாகவும் மேலும் நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்ததுடன், முன்பள்ளி ஆசிரியைகளுக்கு ஆங்கில அறிவின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு ஆங்கிலப் பயிற்சியையும் முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் இதனூடாக முன்பள்ளி மாணவர்களும், எதிர்கால சமூகத்தினரும் பயனடைவார்கள் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி வடமாகாணத்தில் முன்னர் ஆயிரத்து 900 முன்பள்ளிகள் அடிப்படை வசதிகள் இல்லாத சூழலில் பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கிவந்ததாகவும், இதனை அடுத்து கல்வி அமைச்சினூடாக பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்ததாகவும் அந்தவகையில் வடமாகாண முன்பள்ளிக் கல்விக்காக கொள்கைத் திட்டத்தை வகுத்து, அதற்காக ஒரு கல்விப்பணிப்பாளரை நியமித்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலுக்கமைவாக செயற்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் மாதாந்த சம்பளமாக 3000 ரூபா வீதம் முன்பள்ளி ஆசிரியைகளுக்கு கொடுக்கப்படும் அதேவேளை, சீருடையும் வழங்கப்பட்டு வருகின்றது.

மகிந்த சிந்தனையின் பிரகாரம் அனைத்து சிறார்களுக்கும் சீரான கல்வியை வழங்க வேண்டும் என்பதற்காக எதிர்காலத்திலும் பல்வேறு செயற்திட்டங்கள் அமைச்சரின் வழிகாட்டலுக்கும், ஆலோசனைக்கும் அமைவாக வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 449 முன்பள்ளி ஆசிரியைகளுக்கு அமைச்சர் மற்றும் வடமாகாண ஆளுநர் ஆகியோர் பதக்கங்களை அணிவித்து டிப்ளோமா சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தனர்.

நிகழ்வில் அதிதிகளுக்கான நினைவுப் பரிசில்களை 'ஆறுதல்' நிறுவனத்தலைவர் சுந்தரம் டிவகலாலா வழங்கி வைத்தார்.

நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், மாகாண முன்பள்ளி கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா வடமாகாண கல்விப் பணிப்பாளர் செல்வராசா, உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# 5 விக்கெட்டுக்களால் இந்திய அணி வெற்றி



இந்தியாவில் நேற்று இடம்பெற்ற 20 இற்கு 20 கிரிக்கெட் போட்டியில் 5 விக்கெட்டுக்களால் இந்தியா வெற்றியீட்டியுள்ளது.

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையே இடம்பெற்ற போட்டியில் இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய இந்திய அணி 17.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கட்டுக்களால் வெற்றியீட்டியது.

# ஊழியர் சேமலாபநிதி செலுத்தத் தவறினால் நீதிமன்ற நடவடிக்கை

(வவுனியா)

ஊழியர் சேமலாப நிதி செலுத்தத்தவறிய 8 நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார். டிசெம்பர் மாத காலப் பகுதியில் யாழ். மற்றும் கிளிநொச்சி, வவுனியா பகுதியில் வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் மேற்கொண்ட பரிசீலணையின் போது ஊழியர் சேமலாப நிதியினை செலுத்தத் தவறிய நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டன.

அந்த வகையில், யாழ். நீதிமன்றில் 03 வழக்குகளும், கிளிநொச்சி 02, வவுனியா 03 வழக்குகளும், வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு ஊழியர் சேமலாப நிதியினை செலுத்த தவறும் நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், செலுத்த தவறிய காலப்பகுதியில் இருந்து ஊழியர் சேமலாப நிதி செலுத்த வேண்டுமென்றும் அத்துடன் நீதிமன்ற அபராதம் செலுத்த வேண்டுமென்றும் அவர் கூறினார்.

அதேவேளை, சம்பளம் வழங்கப்படாமை மற்றும் காரணமின்றி வேலை நிறுத்தம் போன்ற காரணங்களுக்காக தொழில் தருநர்களுக்கு எதிராக யாழில் 04, கிளிநொச்சி 02, வவுனியா 03 என தொழிலாளிகளினால் மொத்தம் 09 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

# குடை சாய்ந்தது வாகனம் பொலிஸார் உயிரிழப்பு

(கொழும்பு)

சிலாபம், பங்கதெனிய தெதுரு ஓயா பொலிஸ் சோதனைச் சாவடிக்கு அருகில் கனரக வாகனமொன்று நேற்று அதிகாலை சாவடி மீது சரிந்து விழுந்ததால் கடமையில் இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

வெள்ளப் பெருக்கின் காரணமாக பாதையின் ஒரு பகுதி உடைந்து காணப்பட்டதால் குறித்த கனரக வாகனம் அருகில் இருந்த சோதனை சாவடியின் மீது குடைசாய்ந்துள்ளது. இதன் போது சோதனைச் சாவடியின் உள்ளே இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழந்துள்ளார். சம்பவ இடத்திற்கு பெக்கோ வாகனம் கொண்டுவரப்பட்டு கனரக வாகனத்தை அகற்றிய பின்னர் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

# வெளிநாட்டு தூதுவர்கள் நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ள 6 நாடுகளைச் சேர்ந்த தூவர்கள், தங்களுடைய நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளனர்.

இந்நிலையில், பெலாரஸ் குடியரசின் இலங்கைக்கான புதிய தூதுவராக விட்டலி ஏ. பிரீமா, அயர்லாந்தின் இலங்கைக்கான தூதுவராக பெய்லிம் மெக்லாக்லின், சுவீடனின் இலங்கைக்கான தூதுவராக ஹெரால்ட் சன்ட்பர்க், மொங்கோலியாவின் இலங்கைக்கான தூதுவராக சஞ்ஜாசுரேன் பயரா, ஆப்கானிஸ்தானின் இலங்கைக்கான தூதுவராக சய்டா மொஹமட் அப்டாலி மற்றும் பர்கினா பசோவின் இலங்கைக்கான தூதுவராக இட்ரிஷ ரவோயூ அவுட்ராகோ ஆகியோரே இவ்வாறு புதிதாக நியமனம் பெற்றவர்களாவர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை இவர்கள் தங்களது நியமனக் கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளித்தனர். இந்நிகழ்வில், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் கலந்துகொண்டார். இவர்கள் அனைவரும் இந்தியாவின் புதுடில்லி நகரில் அமைந்துள்ள தூதுரகங்களில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நம்பிக்கையுடன் இருங்கள் உலகம் இன்று அழியாது

(கொழும்பு)

மக்கள் மத்தியில் பீதியை கிளப்பிக்கொண்டிருக்கும் உலக அழிவு மற்றும் 3 நாள் இருள் என்பவற்றை நாசா விஞ்ஞானி டேவிட் மொரிஸன் முற்றாக மறுத்துள்ளார்.

கடந்த சில வாரங்களாகவே நாசாவை மேற்கோள்காட்டி உலக அழிவு மற்றும் 3 நாள் தொடர்ச்சியான இருள் என சில மத அமைப்புக்கள் தங்களின் சுய இலாபத்திற்காக பிரசாரம் செய்து வருகின்றது.

மேலும் குறுந்தகவல், ஈமெயில் மூலமாகவும் இது போன்ற வதந்திகளை நாசாவை ஆதாரம் காட்டி தகவல்களை வெளியிட்டு வருகின்றனர் சிலர். இந்நிலையிலேயே நாசாவின் சிரேஷ்ட விஞ்ஞானி டேவிட் மொரிஸன் இவற்றையெல்லாம் மறுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்து வெளிடுகையில், உலகம் நாளை அழிந்துவிடும் என்பதை நாசாவினை மேற்கோள் காட்டி வெளியாகும் செய்திகளில் உண்மை இல்லை. மேலும் தற்போதைக்கு உலகம் அழிய எது விதமான சாத்தியமும் இல்லை.

அது மட்டுமின்றி விண்கல் ஒன்று உலகை தாக்கப்போவதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் இதுவரையில் அவ்வாறான விண்கல் எதுவும் சூரிய மண்டலத்துக்குள் வரவில்லை என்பது உறுதி.

இதேபோல துருவ மாற்றம் ஏற்படப்போகின்றது இதன்போது 3 நாள் தொடர்ந்து உலகம் இருளாகவுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்களிலும் எதுவித உண்மையும் இல்லை. இது தொடர்பாக நாசா கருத்துக்கள் வெளியிட்டுள்ளதாக வரும் செய்திகள் போலியானது. எனவே மக்கள் இது தொடர்பில் பீதியடைய வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துள்ளார்.

# சுரேஷ் எம்.பி. அரசியல் கோமாளி பிரபா கணேசன் வர்ணிப்பு





13 ஆவது திருத்தத்தை ஆதரித்த அரசுதரப்பு எம்.பிக்கள் திவிநெகுமவை ஆதரிப்பார்களேயானால், அவர்கள் கோமாளிகள் எனக் கூறியிருக்கும் கூட்டமைப்பு எம்.பி.சுரேஷ் பிரேமச்சந்திரன், தான் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்ய முடியாத ஒரு அரசியல் கோமாளி என நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்தார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

13 ஆவது திருத்தச் சட்டத்தை அரச பங்காளி கட்சிகள் இல்லாதொழிக்க முற்படும் பொழுது அதனை பலப்படுத்துவதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் [illegible]கப்பட்ட முயற்சியின் பிரகாரமே நான் உட்பட 31 எம்.பிக்கள் தமது அபிலாஷைகளை ஜனாதிபதிக்கு தெரிவித்திருந்தோம்.

யாழ்.மாவட்டத்தின் வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சிகளை விசமத்தனமாக சுரேஷ் பிரேமச்சந்திரன் கொச்சப்படுத்துகின்றார்.

யார் எதைச் செய்தாலும் அது எமது தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய விடயமாக இருக்கின்றதா என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு தாங்கள் தான் தலைவர்கள் என்ற மமதையில் தமிழ் மக்கள் விடயத்தில் நன்மை செய்யும் ஏனைய அரசியல் தலைவர்கள் ஊடகம் மூலமாக கேவலப்படுத்துவது இன்று சர்வசாதாரணமாகிவிட்டது எனத் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதம் அச்சகத்தில் 2012 டிசம்பர் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.